1287


# கன்மோகினி

# JAGANMOHINI

1—1—58

1287
4. 58.

25 நயா பைசா




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS
3C
N 58·35 · 1
183246



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

ஜனவரி 1958. மலர் 35, இதழ் 1. ஏவிளம்பி ஞு மார்கழி மீ

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| க்ஷேமலாபங்கள் | 1 |
| புத்தாண்டின் பலன் எப்படி —V.K.பார்த்தசாரதிஐயங்கார் | 3 |
| என்னைக் கவர்ந்த காந்தி —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி | 8 |
| பாரதப் பூங்கா —வசுமதி ராமசுவாமி | 11 |
| பரிசுக்குமேல் பரிசு —. M.J. பத்மா | 14 |
| கருணைக் கடல் —T. S. ராஜகோபாலன் | 17 |
| தீபஸ்தம்பம் முன்னுரை | 23 |
| ஜல்...ஜல்... —வை.மு.விஜயலக்ஷ்மி | 25 |
| சொல்லட்டுமா? —ஹாஸ்ய நடிகர் L. நாராயணராவ் | |
| கிழக்கு வெளுத்தது —வை. மு. கோ. | [1-30] |



## மதுரையில் நமது ஏஜென்ட்

ஸ்ரீமான் R. பட்டாபிராமன்,
மதுரை நியூஸ் ஏஜென்ஸி,
31, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

---

## ஏஜெண்டுகள் தேவை

நமக்கு ஏஜென்ட் இல்லாத ஊர்களில் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் முழு விவரங்களுக்கு எழுதவும்.

காரியஸ்தர்,
ஜகன் மோகினி.

## சந்தா நேயர்களுக்கு

## முக்கிய வேண்டுகோள்

உங்களது புது வருஷச் சந்தாவை சீக்கிரம் அனுப்பி என்றும்போல ஆதரவளிக்கக் கோருகிறோம்.

போன வருஷச் சந்தா பாக்கியுள்ளவர்கள், இந்த வருஷச் சந்தாவுடன் சேர்த்து அனுப்பவும்.

உங்களுக்கு வேண்டிய புத்தகங்களின் விலையை அனுப்பினல் தபால் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

காரியஸ்தன்
"ஜகன்மோகினி"

ஸ்ரீ

# க்ஷேமலாபங்கள்

வாசக மகனீயர்களுக்கு, நமஸ்காரம்.

உலகத்திற்கே புத்தாண்டு பிறந்துவிட்டது. 1958-ம் வருஷம் நம் மோகினிக்கும் 35-வது ஆண்டு பிறந்து நம்மை யெல்லாம் மகிழ்ச்சியில் திளைவிக்கிருள். புத்தாண்டில் அனைவரது க்ரகங்களிலும் பால் பொங்கி பசுமையாய் செழித்து விளங்க எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறேன்.

35-வது வயதில் ஜகன்மோகினி பல இனிய, புதிய விஷயங்களைத் தாங்கி நின்று, ஆனந்தமூட்டுகிருள்.

1. தலையங்கத்தில் தலைசிறந்த ஸ்ரீ. V. K. பார்த்தசாரதி ஐயங்கார் வழக்கம்போல் விஷயதானம் செய்து மோகினியின் முதலிலே நிற்கிருர்.

2. 'என்னைக் கவர்ந்த காந்தி' என்ற புதிய தொடரை ஸ்ரீ. K. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் தொடங்கி வைத்திருக்கிருர். அவரை காந்தி எவ்வாறு கவர்ந்தாரோ? அப்படி, அவர் அளிக்கும் விஷயம் நம்மையும் கவரும்.

3. 'காப்டன் கல்யாணத்தை' அன்னுக்கும் இனிக்க அளித்துக் கொண்டிருக்கும் ஆசிரியை ஸ்ரீமதி வசுமதி ராமசுவாமி 'பாரதப் பூங்கா' விலிருந்த மாதம் ஒரு மலராக நமக்களித்து மணத்தில் மகிழவைக்கப் போகிருர்.

4. குமாரி, M. J. பத்மா துள்ளும் நடையுடன், புதிய கருத்துடன் கூடிய சிறுகதையை நம் மனதைக் கவரும் வகையில் எழுதியிருக்கிருர்.

5. 'எங்களது இன்பச் செலவு' மூலம் நம்மை பல ஊர்களுக்கும், க்ஷேத்திரங்களுக்கும் அழைத்துச் சென்று கொண்டிருந்த ஸ்ரீ T. S. ராஜகோபால ஐயங்கார், இப்போது பண்டைய விஷயங்களில் பகிர்ந்து கொள்ளச் செய்கிருர்.

6. ப்ரபல ஹாஸ்ய நடிகர் L. நாராயணராவை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். 'சொல்லட்டுமா?' என்ற தலைப்பில் தன் ஹாஸ்யம் நிரம்பிய வாழ்க்கைச் சரிதையை கூறப்போகும் விஷயத்தை சென்ற இதழிலேயே எழுதியிருந்தேன். அதையும் கண்டு களிப்பீர்கள்.


7. என் பாட்டி [வை. மு கோ.] எழுதப்போகிருர்கள் என்றச் செய்தியைச் சென்ற இதழில் வெளியிட்டதுமுதல் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துவரும் கடிதங்களோடு, நேரிலும் பலர் வந்த வண்ணமிருக்கின்றனர். எங்களுக்கெல்லாம் இதைப் பார்க்க ஆனந்தமாயிருக்கிறது. ஆனல் பாட்டி "நாற்பது வருஷமாய் வேகமாக ஓடினுலும், இந்தகை சென்ற இரண்டு வருடங்களில் அடியோடு நின்று

விட்டதால் பழைய நடையும், தெம்பும் உணர்ச்சியும் வருமா? இவ்வளவு ஆவலோடு இருக்கும் நேயர்களை என் எழுத்து ஏமாற்றுது இருக்குமா?" என்றே கலங்குகிறுர். வாசக நேயர்களே! உங்களது ஆதரவும் உத்ஸாகமுமே அவரை ஊக்க வேண்டும்.

மோகினிப் பயிர் உங்களது உதவி மழையால்தான் செழித்தோங்க வேண்டும். மீண்டும் மோகினியை அலங்கரிக்க உதவிய பெரியோர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வை. மு- விஜயலக்ஷ்மி.

உள்ளம் மகிழும் தங்க வெள்ளி அணிகளுக்கும் தரம் குறையா
வைர கற்களுக்கும் ஒருமுறை நேரில் விஜயம் செய்க.



உத்திரவாதமுள்ள வைர ஆபரணங்களுக்கும்,
தங்க நகைகளுக்கும், வெள்ளிப் பாத்திரங்களுக்கும்

ஜோதி ஜுவல்லரி மார்ட்

நெ. 1, பேயாழ்வார் கோயில் தெரு,
(ஸ்ரீ பார்த்தசாரதி கோயில் எதிரில்)
திருவல்லிக்கேணி, : : மதருஸ்-5.

18326

# புத்தாண்டின் பலன் எப்படி?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதிஅய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

## பொங்கலும் வருகுது. மங்களம் பொங்குக.

ஆங்கிலப் புத்தாண்டு, ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி ஐம்பத்தெட்டு, புகுந்தது. ஜகன்மோகினிப் புத்தாண்டு, முப்பத்தைந்து மலர்ந்தது. கிழக்கு வெளுத்து மலரும் புது மலர் சூடி நறுமணம் வீசி நேயர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள் வழங்குகிறாள் ஜகன்மோகினி. பொங்கலும் வருகுது—மங்களம் பொங்குக!—பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!—

## மாதத்தில் சிறந்த மார்கழியில்???

மார்கழி மாதத்தில், மகாநாடுகள் 'இந்தோ யூனியன்' முழுவதும், இதர நாடுகளிலும் நானாவிதமாக நடந்தேறி வருகின்றன. மாதங்களிற் சிறந்தது மார்கழி மாதம். எல்லாம் பருவம் செய்யுங் காலம் இம்மார்கழி. அஞ்ஞான இருளகன்று, ஞான வெளிச்சம் உதயமாகக் கூடியதைச் சூசிக்கும் கிழக்கு வெளுக்கும் காலம். இவ்வளவு அருமையான காலத்தில் ஈச்வரார்ப்பணமாக மனோ வாக்குக்குக் காயங்களைச் செலவழிப்பது விட்டு, ஈசுவரப் பற்றகற்றும் பேச்சுக் கூட்டங்கள் கூடி, புத்தி யுக்திகளை அனுஷ்டானமற்ற உபதேசங்களைச் செய்து போவதில் வீண் விரயப்படுத்துவதால்தான், சுதந்திரம் பெற்றும் சுகமற்று தவிக்கிறோம்.

## வருஷாந்திர காங்கிரஸ் கூடுகையில் பிளவா?

வருகிற ஜனவரி 16ல் அறுபத்தி மூன்றாவது காங்கிரசு மகாநாடு, ஸ்ரீ தேபர் தலைமையில் கௌஹாதியில் நடந்தேறப் போகிறது. மகாநாட்டில் நாட்டின் உணவு நிலைமையும் பொருளாதார நிலைமையும், முக்கியமாக, இரண்டாம் ஐந்தாண்டுதிட்டம் குறித்தும், வெளிநாட்டு நாணயமாற்றுச் சிக்கல்கள் குறித்தும் கணிசிக்கப்படுவதோடு, அரசாங்க அலுவல் பாஷைக் கமிஷன் ரிப்போர்ட்டின் காரணமாக எழுந்துள்ள சச்சரவுகளும், உலக நாடுகள் பற்றிய நிலையும், நிர்வாக விஷயங்களும் கவனிக்கப்படுமாம். எப்பொழுதும்போல இரண்டு மூன்று லக்ஷம் பெயர்கள் கூடி இருப்பதற்கான பெரும் பந்தல் அமையாது, பத்தாயிரத்திற்குள்ளேயே கூட்டம் இருக்கக்கூடிய சிறிய பந்தல்தான் இப்பொழுது அமைக்கப்படுமாம், இந்த ஏற்பாடு, சுருக்கமாகப் பேசிச் சீக்கிரமாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப் போவதற்காகவேயாம். தலைவர்களது சொற்பொழிவுகளைப் பொதுமக்கள் கேட்டு மகிழ, தனித்தனிப் பொதுக்கூட்டங்கள் வேறு நிறுவப்படுமாம். எல்லாம் வாய்ப் பேச்சும், எழுத்துத் தீர்மானங்களுமா யிருக்கப் போகிறதே யொழிய, கிரியாம்சத்தில் நமக்குச் சுகமேதுமில்லை. கட்சிப் பிளவுகள் பெருகி, நாடு பாழ்படுவதுதான் இனி நாம் காணப்போகும் பலனாகக் காண்கிறது.

## அகில இந்திய அரசாங்க பஷை எது?

காங்கிரசுக் கட்சிக்குள் அதிருப்தி கொண்டோரும், அதன் நடத்தை விரும்பாதோரும் அக்கட்சிவிட்டு வெளியேறி, தனித்த தோர் அகில இந்திய நிர்வாகமாகி, டிசம்பர் 28, 29ல் கூடிய ஸம் யுக்த மகாராஷ்டிர காங்கிரஸ் மகாநாட்டில், ஓர் தனிக் கட்சி ஸ்தா பித்துள்ளனர்; இது தவிர, தேசிய உணர்ச்சி பெருக்கும் ஸ்தாப னமாக நிறுவப்பட்ட காங்கிரஸ் சபை, நவீன காலத்தில் ஓர் அர சியல் கட்சிவாத நிர்வாகமாக மாறிக் கொள்கையிழந்து, தூய்மை யொழிந்ததென் றெண்ணும் பல காங்கிரஸ் அங்கத்தினர் ஒன்று கூடி, காங்கிரஸ் ஸ்தாபனத்தை உண்மைத் தூய தேசிய ஸ்தாப னமாகச் சுத்தி செய்யும் நோக்கத்துடன், 'காங்கிரஸ் சோஷலிஸ்ட் போரம்' என்றதோர் உட்பிரிவாகிப் பிரிந்துள்ளனர். இப்பிளவு களும் பிரிவுகளும், காங்கிரஸ் கட்சியின் தூய்மையும் மேன்மையும், பலமும் மங்கி, உண்மைக் காங்கிரசும், இன்று உருமாறித் தடு மாறும் ஹிந்து மதம் போலவே உருமாறித் தடுமாறி நிற்பதை எடுத்துக் காட்டுகின்றன.

## புதியதோர் ஜாதி வகுப்பா?

ஆளுங் கட்சியின் நிலைமை இப்படியிருக்க, அகில இந்திய அரசாங்க அலுவல் பாஷை பற்றி, அரசியல் பெருந் தலைவர்க ளிடை எழுந்து வரும் அபிப்பிராய பேதங்கள், பெருங் கிளர்ச்சி களாக மாறி, வருங்கால நிலையைப் பெரிதும் பாதிப்பதாகவே பய முறுத்துகின்றன. 22-12-57ல் மதுரையில் நடந்தேறிய யூனி யன் அரசாங்க அலுவல் பாஷை குறித்த தென்னிந்திய மகாநாட் டில், திடத்த பத்து காரணங்கள் குறிப்பிட்டு, ஆங்கிலமே அர சியல் பாஷையா யிருத்தலவசியமென்றும், அதற்கேற்ப இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்றும், ஹிந்தி பாஷையை அகில இந்திய அரசியல் அலுவல் பாஷையாக்க எவ் வித முகாந்திரமுங் காணேமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அதை யொட்டி நடந்தேறிய சென்னை மகாநாட் டிலும் இதே தீர்மானம் ஆமோதிக்கப்பட்டுள்ளது. ஹிந்தி பாஷை, பார்லிமெண்டாரால் தேர்ந்தெடுக்கப்பட்டதல்லவென் றும், யூனியன் ஜனத்தொகையில் நூற்றில் 42 பெயர் விகிதமே பேசும் பாஷையென்றும், மத்திய, உத்திர பிரதேசங்கள், பீகார் என்ற மூன்று மாகாணங்களுக்கு மட்டுமேயான தாய்ப்பாஷை யென்றும், இதர மாகாணத்தார் அறிந்திராத அந்நிய பாஷையே யென்றும், எனவே அகில இந்திய அலுவல் பாஷையென அங்கீ கரிக்கப்படும் யோக்யதையற்றதென்றும் இம்மகாநாடுகளில் பேசிய ராஜாஜி, ஸர்.ஸி.பி. போன்ற நிகரற்ற இந்திய தலைவர்கள் சங்கையற விளக்கியுள்ளனர்; வளர்ச்சி பெருத பாஷையென் றும், இதர தென்னிந்திய பாஷைகளிலுள்ள அளவு இலக்கிய விஞ்ஞான நூல்களற்றதெனவும், ஆகவே அகில இந்தியப்பொது ஆதரவு பெறக் கூடியதல்லவெனவும் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் விளக்கியுள்ளார். சென்னை மாகாண மந்திரிகள், பிரதேச பாஷையையும் ஹிந்தியையும் கலந்து ஆதரிப்பது பற்றி ராஜாஜி

யவர்கள் வெகுதெளிவாய் கண்டித்து விளக்கியுள்ளார். இவர்கள் ஏற்பாடு அர்த்தமற்றதென்றும், கட்சிக் கொள்கைக்குப் பயந்து நிறுவப்பட்ட செயலே யொழிய, நாட்டின் பொதுமக்கள் நலத்திற்கு விரோதமானதென்றறிந்தே செய்யப்பட்டதென் பதையும், இதனால் பின்னர் விளையக்கூடிய விபத்துக்களையும் இவர் நன்கு விளக்கியுள்ளார். கமிஷன் ரிப்போர்ட்டில் அபிப்பி ராயபேதப்பட்டெழுதிய டாக்டர் சுப்பராயனவர்கள், 14 இந்திய பாஷைகளுள், ஹிந்தியென்பது, 'கான்ஸ்டிடுயன்ட் அஸம்பிளி'யா ரால் மட்டும் கட்சிவாத தீர்மானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதே யொழிய, இந்தியப் பார்லிமெண்டாரது ஆதரவு பெற்றதல்ல வெனக் கூறியுள்ளார், அம்பேத்காரும், ஹிந்தியானது பொது ஆதரவு பெற்றதல்ல. கட்சி வாதத்தில் முன் வந்த பாஷை. அதுவும் வட இந்திய காங்கிரஸார் நிறைந்த கட்சிக் கூட்டத்தி லேயே ஜனாதிபதியின் 'காஸ்டிங் ஓட்' கொண்டே தேர்ந்தெடுக்கப் பட்டதென்ற ரகசியத்தை அம்பலப்படுத்திப் போயுள்ளார். எனவே, ஹிந்திக்குப் பதிலாக ஆங்கிலமே யூனியன் அரசியல் அலுவல் பாஷையாக இருந்திடச் சட்டத்தை மாற்றித் திட்டமிட ஏகமனதாக எல்லாத் தலைவர்களும் ஒருமித்திட, நேருவும், மொரார்ஜி தேசாய் அவர்களும் மட்டும் இப்பெருந் தலைவர்களை அவமதித்துப் பேசி, தென்னிந்திய வட இந்திய துவேஷத்தை மூட்டி வளர்ப்பதுபோல் அறிக்கைகள் விடுத்தும், சொற்பொழி வுகள் நிகழ்த்தியும் வருவது, மிகவும் வருந்தத்தக்க விஷயமே.

## வரவை மீறிய செலவின் பலன் என்ன?

பிரதமர் நேரு, சொல்கிறார். ஆங்கிலக் கல்வி பயிற்சி காரண மாக நம் நாட்டில் ஆங்கிலம் பயின்றோரென்றதோர் ஜாதி வகுப்பு ஸ்தாபிதமாகி விட்டதாம்: எனவே, இந்த ஆங்கிலம் பயின்ற ஜாதி வகுப்பையும் பொசுக்கிவிடப் போகிறாராம். மதத்தில்தான் ஜாதிபேதமொழிக்க முயன்று, பிராமண ஒழிப்பு இயக்கமும், வட இந்தியர் பகிஷ்காரமும், தி-க., தி.மு.க., கட்சிக்காரர்களால் வெவ் வேறு உருவில் வேரூன்றி வருகிறது. யூனியன் குடிகள் மத மற்ற மானிடராய் மாண்புறுகின்றனர். ஆங்கிலம் பயில் ஜாதி யெனப் புதியதோர் ஜாதி வகுப்பை நேருஜீயே உண்டாக்கி, அதை ஒழிக்கவும் அவரே முன் வருவாரானால், தி-க., தி-மு-க., கம்யூனிஸ்டு கட்சியாரது கொம்மாளத்திற்குக் கேட்கவும் வேண் டுமா!— சென்னை பிரதமர் காமராஜரை இக்கட்சியார்கள் ஆதரிப் பது போலவே நேருஜீயையும் இனி ஆதரிப்பர்தான். மதமிழந்த நாமும், கிடைத்துள்ள கலாசாரப் பண்பாடுகளையுமிழந்து கசட ாகை வேண்டியதுதான். ஈ.வே.ரா.வும், நேருஜீயும் ஒருவரை யொருவர் காட்டுமிராண்டி நாகரீகத்தவரென ஏசிப் பேசுவது, உண்மையிலேயே யூனியன் குடிகளை இனி அநாகரீகத்தாராகவே ஆக்கி விடுமோ என்னவோ! தி.மு.க. தலைவர் 26-1-58 க்குள் ஈ.வே.ரா. பெரியாரை அரசாங்கம் விடுதலை செய்யாது போமாகில் அதற்கப்புறம் தாங்கள் அவரது விடுதலைக்காகச் சாத்வீகப் போராட்டக் கிளர்ச்சி தொடங்கப் போவதாக முன்னறிக்கை

விடுவித்துள்ளனர். காமராஜரை இது விஷயமாக இவர்கள் கண்டு பேசியும் உள்ளனராம். இங்கிலேயில் சென்னை, ஆந்திரா, மைசூர் மாகாணப் பிரதம மந்திரிகள், 30-12-57ல் அரசாங்கப் பொதுப் பாஷைப் பிரச்சினை பற்றிக் கூடிப் பேசப் போகிருர்களாம்.

## புதிய கல்வித் திட்டம் ஜனங்களின் நன்மைக்கா?

இதனிடையே இரண்டாம் ஐந்தாண்டு திட்டமும், அது பற்றிய பணமுதல், பொருளாதார விளைவுகள் பற்றியதுமான பிரச்சினைகளெழுப்பும் வகுப்புவாத பேதக் கட்சிகள் வேறு நம் நாட்டை உருத்தெரியாது சிதைவிக்கும் போல் காண்கிறது. கையில் வருவாய்க்கு வழியில்லாது திட்டமிட்டது தப்பென விளங்கியும், அதிகாரிகள் இன்னமும் கடனிலும் வரியிலும் நம் நாட்டையும் நம்மையும் வீழ்த்த முயல்வது ஏனோ!--மக்களுக்கு உண்ணச் சோறும், உடுக்க உடையும், நிற்க நிழலும் முதலில் கொடுத்த பிறகல்லவா நாட்டின் நலத்திற்குத் திட்டங்கள் வகுக்க வேண்டும். 'திட்டம் வகுத்தாகிவிட்டது—சோறு தின்னுதேயுங்கள்—வீடும் நிலமும் தியாகம் செய்யுங்கள்'—என, எந்த பண்பாடும் நாகரிகமுமிக்க அரசாங்கமாவது, குடிகளை வற்புறுத்துமா?

## வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டால்....?


இதன் மத்தியில், பிள்ளைகளது கல்வி திட்டம் வேறு படாத பாடு படுகிறது. எத்தனையோவிதமான மாறுதல்கள் அடைந்து, இன்று, கடைசியாக ஏழுவருடப் பள்ளித்திட்டம் ஒன்று அமுலுக்கு வந்துளது சென்னை மாகாணத்தில். 1958—1959 முதல் 2 தரம்கொண்ட பள்ளிப் படிப்பு அமுலுக்குவரும். ஏழுவருட 'எலிமெண்டரி' பள்ளிப் பயிற்சி. பின்னர் நான்கு வருடம், உயர்தர 'ஸகிண்டரி' பள்ளிப் பயிற்சி. தாய்ப் பாஷையிலும், பிரதேச பாஷையிலும் பாடம் பயில்விக்கப்படும். ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலம் ஆரம்பிக்கப்பட்டுக் கட்டாயப் பாடமாகும். பள்ளிப் படிப்பு ஆங்கிலமும், அரசியல் அலுவல்கள் தமிழுமாக சென்னை மாகாணம் மிளிரப்போகிறது. ஏதாவது முன்யோசனையுடன் மக்களது நலம்கோரித் திட்டங்கள் இடப்படுகின்றனவா?

உள்நாட்டு வியவகாரங்கள் இவ்வளவு கலவரத்தில் கிடக்க, நமது நாடு, பிற நாடுகளுக்கு, அன்புக்கும், ஒத்துழைப்புக்கும், சமாதானத்திற்கும் வழிகாட்டியாகத் தூதுசெல்கிறது. நம்மிடை காஷ்மீரம் பற்றிய பாகிஸ்தான் பிரச்சினை தீராப் பிரச்சினையாகி, துவேஷமும் எதிர்ப்பும் குறையாது மிகுந்தே வளர்வதாகிறது. இந்தியரது பொறுமையை, அவரது இயற்கைக் கோழைத்தனமென அலக்ஷியத்துடன் எண்ணுதீரென எதிரி நாடுகளுக்கு நமது ஸ்ரீ. வீ. கே. கே. மேனன் எச்சரிக்கை விடுத்துள்ளார். உலக நாடுகள், யுத்தநோக்கம் விடுத்து சமாதான ஒத்துழைப்பு தேடுவதெல்லாம் பேச்சளவேயான பரஸ்பர சந்தேகப் பிரச்சினையாகத்தான் காண்கிறது. ஸோவியத் யூனியன் விடுத்துள்ள சமாதான அறிக்கையை, அமெரிக்காவும், இங்கிலாந்தும் இன்னமும்

ஆமோதியாது, சந்தேகித்தே ஒதுக்கிப் போடுகின்றன. தம்மைத் தாம்தாம் பலப் படுத்திக்கொள்ளும் ஆயுத முஸ்தீப்புக்கள் செய்துகொண்டே, ஒவ்வொரு வல்லரசும் இதர நாட்டாரை ஆயுத முஸ்தீப்பு கைவிட்டுவிட எச்சரித்துச் சமாதான நாடகம் நடிக்கின்றன. 26-12-57-ல் கெய்ரோவில் 25 சுதந்திர நாடுகளும், 17 இதர நாடுகளுமாக 42 நாட்டார் கூடி, ஆப்பிரிக்க—ஆசியா நல்லுறவு நடவடிக்கைகள்பற்றி ஆலோசனை மகாநாடு நடத்தின. பரஸ்பர சந்தேக மனப்பான்மையுடன் பஞ்சசீலப் பிரகடனம் செய்து, மேற்கத்தி வல்லரசுகளுக்கும் கிழக்கத்திய வல்லரசுகளுக்கு மிடையேயுள்ள பிளவை மிகுத்துவதுதான் இம் மகாநாட்டின் முடிவுபோல் தெரியவருகிறது. யாவரும் மதிள்மேல் பூனைபோல நடக்கின்றனர். எந்தப் பூனை எந்தச் சமயம் எந்தப் பக்கம் எப்படிக் குதிக்குமோ, ஈச்வரனுக்குத்தான் வெளிச்சம். வெள்ளம் தலைக்குமேல் ஓட ஆரம்பித்துவிட்டால் யாரால்தான் அணைபோட்டு உதவக்கூடும்?—புலர்ந்த 1958 இந் நிலையையே உணர்த்துகிறது. மகர சங்கராந்தி பலனாவது நன்றாய் இருக்க இறைவன் அருள் புரிவாராக.

★

---



"ஏண்டி உன் நாட்டுப்பெண் தினமும் பாலை இப்படி பொங்க விடுகிறாளே"

"அம்மா! அவள் பாலையாவது பொங்க விடட்டும். பொங்கலையாவது பொங்கட்டும். கச்சேரி போகும்வரை சினம் பொங்காது இருந்தால் போதும் ஸ்............என் பிள்ளை காதில் படப் போகிறது.

# ★ என்னைக் கவர்ந்த காந்தி ★

ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

★



நான் காந்தி அடிகளை முதல் முதலாகக் கண்டது பல ஆண்டுகளுக்கு முன் நான் நீதிபதியாக இருந்த காலத்தில். நான் சென்று கொண்டிருந்த ரயில் வண்டியில் அவரும் சென்று கொண்டிருந்தார். ஆனால் அவர் மூன்றாவது வகுப்பு வண்டியில் இருந்தார். ரயில் வண்டி நின்ற ஒவ்வொரு இடத்திலும் ஜனங்கள் திரள் திரளாக அவருடைய தரிசனத்திற்காக வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் காத்திருந்தார்கள். என் மனமும் அவரைக் காணவேண்டும் என்று என்னைத் தூண்டியதால் நானும் ரயில் வண்டி நின்ற ஓரிடத்தில் இறங்கி அவரைத் தர்சனஞ் செய்தேன். இடுப்பில் மட்டும் முழங்கால்களுக்குமேல் இழுத்துக் கட்டப்பட்ட ஏழை மக்களணிந்துகொள்ளக் கூடிய ஆடம்பரமற்ற சாதாரணத் துணி. இடுப்புக்கு மேல் துணி இல்லை. இந்தக் காரணத்தாலும் அவர் காஷாய ஆடையை அணியாவிட்டாலும் முற்றுந் துறந்த துறவறத்தில் வாழ்ந்து வந்ததாலும் அவரை ஆங்கில நாட்டு முதல் அமைச்சர் வின்ஸ்டன் சர்ச்சில் "பக்கிரி" (Fakir) என்று கூறினான். ஆடையாடம்பரம் இல்லாவிட்டால் என்ன? 'அகத்தின் அழகு முகத்தில்' என்கிற பழமொழிப்படி அவருடைய எளிய தோற்றமும் கண்களின் அன்பும் முறுவலின் வசீகரமும் கூப்பிய கைகளும் யாவருடைய உள்ளங்களையும் கவர்ந்தன.

அச் சமயத்தில் அவருடைய சுற்று பிரயாணம் பாரத நாட்டின் பண்பையும் பாரத நாட்டு மக்களுடைய எண்ணங்களையும் விருப்பங்களையும் அறிவதற்காக ஏற்பட்டது. அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்தான் அவர் தென் ஆப்பிரிக்காவில் ஒத்துழையாமை என்ற அரசியல் ஆயுதந் தாங்கி வீரப் போர் நடத்தி வெற்றியடைந்து தாய் நாட்டின் விடுதலைக்காக வந்தார். அப்பொழுது அவர் தாய் நாட்டு விடுதலைப் போரைத் தொடங்கவில்லை. வெகுநாளாகத் தென் ஆப்பிரிக்காவில் தங்கிவிட்டதால் தாய் நாட்டு மக்களின் வீரக் கனலை எழுப்பி சுதந்திரப் போரில் அவர்கள் ஈடுபட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கும்படி செய்ய முடியுமா என்று அறிந்து கொள்வதே அவருடைய குறிக்கோள். அதற்குப் பிறகு தான் ஒத்துழையாமை, சாத்விக எதிர்ப்பு, நிர்மாண திட்டம், கதரியக்கம், தீண்டாமை ஒழிப்பு, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, கள்ளுக் கடை மறியல்

முதலிய பல துறைகளில் அவர் இறங்கினார்.

நான் அவரை நெருங்கி சந்தித்துப் பேசியது நான் உபகாரச் சம்பளம் பெற்றுச் சென்னைக்கு வந்து சேர்ந்த பிறகு தான். அவரைப் பல இடங்களில் சந்திக்க நேர்ந்தது. நான் அப்பொழுது இந்தியாவிலிருந்து ஒரு பகுதியைப் பாகிஸ்தான் என்று பிரித்துக் கொடுக்கக் கூடாது என்ற பிரச்னையில் மிகவும் ஈடுபட்டிருந்தேன். தாழ்த்தப்பட்டு ஒதுக்கப்பட்டு தீண்டாதவர்கள் என்று கூறப்பட்டவர்களை நம்முடைய ஹிந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் சம உரிமை யுள்ளவர்களாகவும் நடத்தவேண்டும் என்பது என்னுடைய தீர்மானமான கொள்கை. ஐந்து கோடி மக்களைச் சண்டாளர்கள் என்று நினைப்பது சாஸ்திரமுமல்ல அறிவாளி முறையுமல்ல என்று என் எண்ணம். என்னுடைய தந்தை பேராசிரியர் கே. சுந்தரராமய்யர் அவர்களும் இந்த எண்ணத்தை ஆதரித்தார்கள். அக்காலத்தில்தான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் திருவாங்கூர் ராஜ்யத்தில் திவானாக இருந்தார். கேரள ராஜ்யத்தில் தீண்டாமை தாண்டவம் மிக அதிகம். வெகு தைர்யமாக அவர் இளம்பருவத்தில் அரசரானவரும் அறிவாளியுமான திருவாங்கூர் மகாராஜாவுக்கு நல்ல புத்திமதி கூறி அவர் மூலமாக தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை 1936-ம் ஆண்டில் இயற்றினர். அது அமுலுக்கு வந்த சில நாட்களுக்குள் மகாத்மாஜிச் சென்னைக்கு ஹிந்தி பிரசார சங்கப் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்க வந்தார். அப்பொழுது நான் அந்த விழாவுக்குச் சென்றேன். அதற்கு சில தினங்களுக்கு முன் என் தந்தையும் நானும் "ஹிந்து"ப் பத்திரிகையில் திருவாங்கூர் சட்டத்தை ஆதரித்து எங்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தோம். ஒரு நண்பர் என்னை மகாத்மாஜியிடத்தில் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி, "இவர் உயர்தர நீதிபதியாக இருந்தவர். இவருடைய தந்தை பேராசிரியர் கே. சுந்தரராமய்யர்" என்று கூறினார். உடனே அன்புததும்பும் பார்வையுடனும் மோகன முறுவலுடனும் என்னை நோக்கி; "நீங்கள் இருவரும் இந்தப் பிரச்னையில் தீண்டாமை வழக்கத்தை எதிர்த்து எழுதியது உண்மைக்கு மிகுந்த பலத்தைக் கொடுக்கும். அது எனக்கு ஒப்பற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது;' என்று அவர் கூறினார். அது மட்டுமல்ல அவர் ஹிந்தி பட்டமளிப்பு விழாவில் தலைமைதாங்கப் புறப்பட்டார். என்னைத் தன்னுடன் கூட அழைத்துச் சென்றார். தன்னுடைய வலது கையை என்னுடைய வலது தோளில் போட்டு என்னைத் தன்னுடைய தோழனாக அழைத்துச் சென்றார். அது மட்டுமல்ல திருவிழா மேடையில் என்னைத் தன் வலது பக்கத்தில் அமர்த்தினார். அங்கே வந்திருந்த பல பிரமுகர்கள் ஆச்சர்யமடைந்தார்கள்.

இது என்னைப் பற்றிக் கூறுவதற்கல்ல. அவருடைய இதயத்தின் பெருமையையும் கனி

வையும் கூறுவதற்கே. அதற்குப் பிறகு அந்த மகானைப் பல இடங்களில் சந்தித்தேன். அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்களுக்குப் பல இடங்களில் சென்றேன். லக்ஷக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். அவர் மிகவும் விரும்பிய தூய்மையும் அமைதியும் ஒற்றுமையும் அந்தக் கூட்டங்கள் மூலமாகத்தான் நாடு முழுவதும் பரவும்படி ஏற்பட்டது. தற்காலத் தலைவர்கள் தெய்வ பக்தியையும் பிரித்து விட்டார்கள். அவர் இரண்டையும் அர்த்த நாரீச்வரர் போன்ற பிரியாத - பிரிக்கமுடியாத ஒரே தத்துவமாகவே கண்டார்.

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி தேசியப் போர் கடவுளுடைய அருளால் வெற்றியில் முடிந்து தாய்நாடு விடுதலை அடைந்து ஆயிரம் ஆண்டுகளாக இழந்திருந்த சுதந்திரத்தையும் சுயராஜ்யத்தையும் அடைந்தது. ஆனால் 1948-ம் ஆண்டு ஜனவரிமாதம் 31-ல் ஒரு அரசியல் வெறியனால் அவர் சுட்டுக் கொல்லப் பட்டார். அந்தப் பரிதாப நாளின் நினைவுக்காகத்தான் மகாத்மாவின் சிஷ்யையும் பக்தையுமான வை. மு. கோதை நாயகி அம்மாள் (ஜகன் மோகினி ஆசிரியை) இந்த மாத மலரை அவருடைய திருவடிகளில் சமர்ப்பித்திருக்கிறாள். அந்தக் கோர சம்பவம் ஏற்பட்ட பின் நான் வடநாட்டுக்குப் புண்ணியஸ்தல யாத்திரையாகச் சென்றேன் அப்பொழுது அவர் உயிர் நீத்த இடத்தை தரிசித்து வணங்கினேன். அவருடைய முகத்திலிருந்து கீழே விழுந்த மூக்குக் கண்ணாடியையும் கால் செருப்புகளையும் கண்டேன். "ரகுபதி ராகவ ராஜா ராம் பஜனை நடந்து கொண்டிருந்தது.நானும் கலந்துகொண்டேன். பிறகு அவருடைய சமாதியில் மலர் மாலையிட்டு வணங்கினேன்.

வ்யதிகரித திகந்தா: சிவேத மானை
ர்யசோபி:
ஸுக்ருத விலஸிதானும் ஸ்தான
மூர்ஜஸ்வ லானும்
அகலித மகிமான: கேதனம்
மங்களானும்
கதமபி புவனேஸ்மின் தாத்ருசா:
சம்ய வந்தி

(உலகமெங்கும் பரவியிருக்கும் தூய புகழுடைய புண்ணியம் விளங்கும் உன்னத ஸ்தானமாக இருப்பவர்களும் எண்ணங்களால் அளவிட முடியாத மகத்துவம் உள்ளவர்களும், உலக மங்களத்தின் கொடியாக விளங்கப் பட்டவர்களும் மண்ணுலகில் சில சமயங்களில் தான் நம்முடைய அறிவுக்கு எட்டாத படி கடவுள் அருளால் பிறந்து உலகத்தைப் பாதுகாத்து வருகின்றார்கள்.)

*

## அதிர்ச்சி

ஆபீஸில் வேலை ஓடாமல்
காபியின் நினைவு கழுத்தையாட்ட,
மனைவியின் முகம் சிரித்து நிற்க,
இருவரும் கச்சேரிக்குச் செல்லும்
காட்சி கண்ணெதிரில் ஓட,
விரைந்தேன் வீட்டை நோக்கி
ஆனால்—
"அப்பா! அம்மாவும், சித்தியும்
கச்சேரிக்குப் போய்விட்டார்கள்
நீதான் எங்களுக்குத் துணை"
என்ற குரல் எழுந்ததும்? ...

# பாரதப் பூங்கா

வசுமதி ராமசுவாமி

மற்ற நாடுகள் நாகரீகம் அடைவதற்கு வெகு காலத்திற்கு முந்தியே நம் நாடு நாகரீகம் அடைந்துவிட்டது. அதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது நம்முடைய நாட்டுக் கோவில்கள், புராணக் கதைகள். பெரியோர்களின் லக்ஷிய வாழ்க்கை.

பாரத தேசத்தின் உண்மையான செல்வம் ராமாயணம், பாகவதம், மகாபாரதம் இவைகள்தான். மக்களின் படாடோப வாழ்க்கை உயர்வானதில்லை. பண்பட்ட உள்ளத்துடன், உயர்ந்த லக்ஷயத்துடன் வாழும் வாழ்க்கையே உன்னதமானது.

கதை எங்கே இருந்து பிறக்கிறது? அரசன், மக்கள், நல்ல நேர்மையான வாழ்க்கை வாழ்ந்திருந்தால் நாம் நல்ல கதைகளைப் பெறமுடியும். அடுத்தபடியாக அதை சாச்வதமாக எழுதி அமைத்துக் கொடுக்க உயர்தர ஆசிரியர்கள் வேண்டும். மூன்றாவதாக அந்த கதையின் சிறப்புகளை அறிந்து மகிழக்கூடிய பொதுமக்கள் வேண்டும். கடந்துபோன விஷயம்தான் கதை. கற்பனைமட்டும் கதை அல்ல. அன்று பால்கடலைக் கடைந்து எடுத்த அமுதத்தை மோகினி தேவர்களுக்கு வழங்கினாள். வரம் பெற்றார்கள். புத்துயிர் அடைந்தார்கள், இன்று ஜகன்மோகினி நாட்டிற்கு தேவையான அமுதத்தை அள்ளி வீசுகிறாள். இதே அரும்பணியில் முப்பத்தைந்து ஆண்டுகளை கடந்து பொறுப்புள்ள ஒரு நிலையை அடைந்திருக்கிறாள். இதன் வாயிலாக மோகினி அன்பர்களுடன் உறவாட வாய்ப்பு கிடைத்ததைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

ராமாயணம் நாடாளும் மன்னனின் லக்ஷிய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது.

அந்த தொடர்கதையில் இன்னல்கள் இறைவனையும் சூழ்ந்துகொள்ளும். ஆனால் சத்தியம் தர்மம் என்றென்றும்நிரந்தரமானது என்றதத்துவம்நிறைந்தது. அதில்வரும் பெண்கள் மாதர்குல வழிகாட்டிகள்.

அடுத்தபடியாக ஸ்ரீமத் பாகவதம். அந்த கிரந்தம் ஒரு கல்விக் களஞ்சியம் போன்றது. ஒவ்வொன்றை தெரிந்துகொள்ள வேறு வேறு புத்தகங்களை புரட்ட வேண்டாம். அதில் பூகோளம், தத்துவம், விஞ்ஞானம், பொருளாதாரம், சட்டம், உரிமை, கடமை, ஜனனம், மரணம், பாபப்புண்யம். இப்படி சகல விஷயங்களின் சாரத்தையும் தாங்கி நிற்பதுதான் பாகவதம். இந்த பழம்பெரும் நூலை படிப்பதில் அநேக அறிவுகளைப் பெறுவோம்.

மூன்றாவதாக மகாபாரதம். எதையாவது உண்மைஅல்லவென அழுத்திச் சொல்ல விரும்பினால் என்ன வேதவாக்கோ என்கிறோம். வேதவாக்கு சத்தியவாக்கு என்று அறிகிறோம். மகாபாரதம் ஐந்தாவது வேதமாக பெரியோர்களால் கருதப்படுகிறது. இதில் அநேக சிறுகதைகள் தொகுதி இருக்கின்றன.

மக்களுக்குள்ள உணர்ச்சி பேதங்கள், அநேக நீதி நெறிகள் இவைகள் நிறைந்தது நான்கு ஆசிரமத்து விதிகள். தியாகம், அன்பு, தர்மம் இப்படி எவ்வளவோ அற்புதங்களை பெரியோர்கள் வாழ்க்கையில் நடத்திக் காட்டினார்கள். இன்று உலகம் எல்லாம் போற்றும் இதையை தாங்கி நிற்கிறது மகாபாரதம்.

நவரத்தினங்கள் விலை உயர்ந்ததாக இருக்கும் அதை அப்படியே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நல்லஆச்சாரியைக்கொண்டு அதை ஆபரணமாகச் செய்து பார்க்கிறோம். அப்பொழுதுதான் அந்த ரத்தினத்தின் மதிப்பு நமக்குத் தெரிகிறது.

உயர்ந்த விஷயங்களை எடுத்து எழுத சிறந்த ஆசிரியரும் தேவை. லக்ஷிய புருஷரான வால்மீகி, பரம ஞானியரான சுகர், பகவானுக்கு சமானமான வியாஸர் இப்படி இந்த மூன்றுக்கும் ஆசியர்களும் அமைந்தார்கள். இன்று நம்மிடையே இருந்துவரும் கர்மயோகி ராஜாஜி இந்த மகாபாரதத்தை அலசி சாராம்சத்தை எடுத்து அழகான விருந்தும் வைத்திருக்கிறார், எளிதில் ஜீரணம் செய்யுபடி அமைந்துள்ளது.

பாரதத்தின் கதைகளை படிக்கிறோம். பிரவசனங்களாக கேட்கிறோம். இவைகளைத் தவிர கர்ண பரம்பரையாக சில கதைகளை கேட்டிருக்கிறோம். அவைகளை மோகினி அன்பர்களுடன் சொல்லி மகிழக் கருதுகிறேன்.

ஆதிகாலத்தில் சூரிய வம்சம் என்ற மாபெரும் சாம்ராஜய மன்னர்களின் பரம்பரை இருந்தது. மன்னர்கள் நீதியும் தருமமும் உருக்கொண்டு அரசு புரிந்தார்கள். அந்த குலத்தின் சிகரமாக இருந்தார் ஸ்ரீராமர். இந்த குலத்து மன்னர்களின் பெருமையை காளிதாஸர் ரகு வம்சம் என்ற மகா காவ்யமாக உருவகப்படுத்தினர்.

சூரிய குலத்தின் பெருமைக்கு அடுத்தபடியாக சந்திர குலத்தின் வம்சம் விளங்கியது. அதில் தோன்றிய பரதன் என்ற அரசனின் பெயரே பரத கண்டம் என்று பின்னல் நாட்டுக்கு பெயராக அமைந்தது. பரதனுடைய குல வரிசையினர்களின் சரிதம்தான் மகா பாரதம்.

ஸ்ரீமத்பாகவதத்தில் கிருஷ்ணனுடைய ஜனனத்திற்கு முன் ஏழு குழந்தைகள் பிறந்தன. பிறந்த உடனே கம்ஸனல் கொல்லப்பட்டார்கள். அவர்கள் உயிர் நீங்குவதுடன் சாபமும் நீங்கியது. அதைப்போலவே வசிஷ்ட முனிவருடைய நந்தவனத்தை அழித்த அஷ்ட வசுக்கள் சாபமேற்று மானிடப் பிறவியாகப் பிறந்தார்கள். கங்காதேவியின் மனதில் வருணனைக் கண்டு ஏற்பட்ட தோஷம் சாபமாக மாறி அவளும் மானிடப் பெண்ணனள். அந்த வருணனுடைய அம்சமாக சந்தனு மகராஜன் சந்திர வம்சத்தில் தோன்றினன். இவர்கள் மனமுவந்து மணந்து மக்களைப் பெறுகிருர்கள். கங்காதேவி தான் பெற்றெடுத்த ஏழு செல்வக் குழந்தைகளையும் கங்கையில் வீசி எறிகிருள். எட்டாவது குழந்தையையும் எறியும்போது அந்த கோருமையை காண சகியாத சந்தனு மகாராஜன் தன் சத்தியத்தையும் மறந்து தடுக்கிருன். பிள்ளைப் பாசம் மனைவியின் காதலையும் மீறுகிறது. கங்காதேவி தன் செய்கையின் காரணத்தையும் சாபத்தையும் சொல்லுகிருள். அந்த அருமைக் குழந்தை தான் பிற்காலத்தில் பீஷ்மர் என்று பெருமைப்பட விளங்கியவர்.

நம்மில் ஒருவர் வைராக்கியமாக இருந்தால் "என்ன பீஷ்ம வைராக்கியமோ" என்ற சொல் இன்னமும் வழங்கிவருகிறது. தேவவிரதனுக்கு சகல கலைகளையும் கங்காதேவி கற்றுக் கொடுக்கிருள். யௌவன வயது வந்ததும் அரசனிடம் மகனை ஒப்புவித்து விடுகிருள். தேவவிரதன் அனைவரும்போற்றும்படியாக இருக்கிருன்.


சந்தனு செம்படவன் மகள் சத்தியவதியைக் கண்டு காதல் கொள்ளுகிருன். பெண்ணின் தந்தை பெருமை அடைந்தாலும் தன் மகளுக்கு பிறக்கும் பிள்ளை பட்டம் ஆளவேணுமென்று ஆசைப்படுகிருன். அரசன் தயங்கி பின்வாங்குகிருன். தேவவிரதன் சத்தியவதியின் தந்தையிடம் தன் தகப்பனருக்கு பெண்ணைக் கொடுக்கலாம் தான் பட்டத்திற்கு வரவில்லையென்று வாக்குறுதி கொடுக்கிருன். ஆனல் பெண்ணின் தந்தை ஆசையின் மிகுதியால் ஒருபடி அதிகமாகப் போகிருர்.

"நீ வராவிட்டாலும் உனக்கு பிறக்கும் மகன் அரசாள வரலாமல்லவா? என்கிருர்.

அப்பொழுது தேவவிரதன் கடுமையான ஒரு பிரதிக்ஞை செய்கிறான். நான் மணம் புரிந்து கொள்ளாமலே பிரும்மச்சரியத்துடன் இருக்கிறேன் என்கிறான். மூன்று உலகமும் நடுநடுங்கிற்று. தேவர்கள் மெய்சிலிர்க்கின்றார்கள். மகரிஷிகளெல்லாம் கண்ணீர் சிந்துகிறார்கள். அன்று முதல் தேவவிரதன் பெயர் பீஷ்மர் என்று வழங்கியது. சந்தியவதி சந்தனுவை மணக்கிறான்.

பீஷ்மர் வெகுகாலம் வாழ்ந்து மகாபாரதம் முடியும் வரை இருக்கிறார். கடைசியிலும் அம்புகளால் துளைக்கப்பட்ட உடலுடன் புண்ணிய காலம் வருவதற்காக உயிரை வைத்துக்கொண்டு காத்திருக்க அந்த தருவாயிலும் பஞ்சபாண்டவர்களுக்கு உயர்ந்த நீதிகளையும் தர்மங்களையும் உபதேசிக்கிறார்.

மகான்கள் சாபம் எல்லாம் நன்மையில் முடியும். இன்றைய உலகில் தன்னுடைய குருட்டு காதலுக்காக பெற்றோர்களையே தியாகம் செய்யும் இளைஞர்களைப் பார்க்கிறோம். அன்று பீஷ்மர் தன் தந்தையின் காதலுக்காக தன்னைத் தியாகம் செய்கிறார். பீஷ்மரின் தியாகத்தை உலகம் உள்ள அளவு மறக்க முடியாது. தியாகம் என்ற சொல்லுக்கு பொருளான இச்சிறு கதையுடன் மகாபாரதம் ஆரம்பமாகிறது.



"ஏனப்பா! உன் பசு அரை படிதானே கறக்கும். எனக்கு இன்னும் அதிகமாய் பால் வேண்டுமே..."

"அவ்வளோதானுங்களே சாமி! நம்ப பசு காமதேனுவாச்சுங்களே. ஒரு படிகூட கொடுக்கும்."

# பரிசுக்கு மேல் பரிசு

குமாரி
எம். ஜே. பத்மா

நீண்ட அந்த ஆற்றில் நீர் வெள்ளம்போல கரை புரண்டு ஓடிற்று. இனிமையான தென்றலினூடே இனிய குழலோசை மிதந்து வந்தது. மணல் நிறைந்த கரையிலே அமரன் அமர்ந்திருந்தான். அவன் குழலிலிருந்துதான் அவ்வினிய ஓசை எழும்பிக் கொண்டிருந்தது.

ஆம். அமரன் அந்நாட்டிலேயே குழல் இசைப்பதில் சிறந்தவன். மறுநாள் நடக்கப்போகும் போட்டிக்காக அவன் பயிற்சி செய்துகொண்டிருந்தான். என்றுமே அலாதிச் சிறப்போடு விளங்கும் அவன் இசைக்கு அன்று அளவேயில்லை. அவனைக் காணுவோர் அவன் இசையைக் கேட்டு மகிழ்ந்தாலும் அவன் உருவத்தைக் கண்டு வருந்தத்தான் செய்வார்கள். கலைச் செல்வத்தைப் பரிபூரணமாக அளித்த கடவுள் அவனுக்கு அழகைக் கொடுக்க மறுத்து விட்டார்.

விக்ரமன் அந்நாட்டிலேயே மிகுந்த செல்வமுடையவன். கலைப் பித்தன். ஒவ்வொரு வருடமும் கலைப் போட்டி வைத்து கலைஞர்களை ஆதரித்துப் பரிசளிப்பது அவன் வழக்கம். அவ்வருடம் தன் அழகு மகள் கலாவையே போட்டிப் பரிசாக வைத்து விட்டான். எனவே ஒவ்வொரு வருடத்தைவிட போட்டிக்கு வருபவர் எண்ணிக்கை அதிகமாயிருந்தது. ஒவ்வொரு வருடமும் அமரன்தான் போட்டியில் வெற்றி பெற்று வந்தான். எனவே கலாவும் அவனுக்குத்தான் கிடைப்பாள் என்று ஊரார் அனைவரும் தீர்மானித்திருந்தனர். இந்த எண்ணம் தோன்றிய பொழுதில் அவர்கள் மனம் வருந்தினர். ஆம், அமரன் ஒருவிதத்திலும் கலாவிற்கு ஏற்றவனல்ல. அவ்வூரில் அமரனுக்கு அடுத்தபடியாக புல்லாங்குழல்வாசிப்பதில் சிறந்திருந்தவன் குணாளன். அழகன். செல்வன். கலாவை மணப்பதற்கு எல்லா விதத்திலும் ஏற்றவன். ஆனால் மறுநாள் போட்டியில் அமரன் பங்கெடுத்துக் கொண்டால் குணாளனுக்கு தோல்வி கிடைப்பது நிச்சயம். எனவே மறுநாள் அமரனை போட்டியில் கலந்துகொள்ளாதிருக்கச் செய்ய வேண்டுமென்று அனைவரும் துடித்தனர். கலாவையும், குணாளனையுமே, அமரனிடம் அனுப்பி வேண்டச் செய்தனர். இதுவும் இரகசியமாகவே நடைபெற்றது. இது கலைப்பித்தன் விக்ரமனுக்கு தெரிந்தால் விபரீதமாகி விடுமே. அனைவரும், அமரன், இந்த வேண்டுகோ

னுக்கு கண்டிப்பாக இணங்கி விடுவான் என்றே நினைத்த னர். ஆனால் அமரன், குண ளனின் வேண்டுகோளை மறுத்து விட்டான். கலாவை மணக்க வேண்டுமென்ற ஆசையினலல்ல. அமரன் தான் அழகற்றவன் என்ப தையும், கலாவிற்கு ஏற்றவ னல்ல என்பதையும், உணர்ந்தேயிருந்தான். ஆனலும், கலையைவிட அழ கையே பெரிதாக மதிக்கும் மக்களைக் கண்டு வெறுப்பு கொண்ட அவன் மறுநாள் போட்டியில் வாசித்தே தீரு வது என்று முடிவு செய்து விட்டான்.

சூறைக்காற்றில் ஆடும் மரத்தைப்போல் குணள னின் மனம் எண்ணப் புய லில் சிக்கித் தவித்தது. கலா, அவன் இதய ராணி அவ னுக்குக் கிடைக்கவேண்டு மானல், நாளை அமரன் போட்டியில் கலந்து கொள் ளாதிருக்கவேண்டும். ஆனல் அமரனே வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டான். இனி அவனைத் தடுப்பதற்கு வழி ஒன்றே ஒன்றுதான். நாளை பொழுது விடிவதற் குள் அமரனை வேலை தீர்த்து விடவேண்டும். கொலை! அதைப் பற்றி நினைக்கும் பொழுதே குணளனின் இத யம் நடுங்கியது. அப்படி யானல் இருக்கிறது மற் றொரு வழி. அவனது இரு கைகளையும் துண்டித்துவிட் டால், அவன் குழல் வாசிக்க முடியாதல்லவா? ஏன் அது கூட வேண்டாம். அந்தக் குழலின்மேல் தவழ்ந்து விளையாடும்விரல்கள், அவற் றை வெட்டிவிட்டாலே போதுமே. எண்ணம் ஓடுகி றது. ஆனல் தெய்வீகக் கலை ஞன் ஒருவனை வேலை தீர்க் கவோ அல்லது அவன் கை யை நீக்கவோ ஊரார் ஒருவ ரும் உதவ மாட்டார்கள். தான் ஒருவனே செய்தாக வேண்டும் அதுவும் பொழுது புலருவதற்குள் நடக்க வேண்டும். முடிவுறாது நீண்ட எண்ணத் தொடருக்கிடை யே நித்ராதேவியின் கரம் குணளனை அணைத்தது.

விக்ரமனின் செல்வமாளி கையிலே துயில்வயப்படாது துடித்தது மற்றோர் இதயம். அதுதான் கலா. பாவம், பேதைப்பெண். இறைவ னைத் துதிப்பதையும், கண் ணீர் வடிப்பதையும் தவிர வேறு என்ன செய்ய இய லும்? பல நாட்களாக, குண ளனைச் சுற்றி வளர்ந்த காதல் தந்தையின் கலைப் பித்தால் நாளை அணையப் போகிறது. விதியைநினைந்து வருந்திய அவளது கண் ணீர்ப்பெருக்கு வற்ற அந்த ஒருஇரவு போதுமா என்ன?

மறுநாள் பொழுது விடிந்து விட்டது. அன்று தான் கலைப்போட்டி. பிர மாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. திரள் திரளாக மக்கள் கூடியிருந் தனர். போட்டியும் ஆரம்ப

மாகிவிட்டது. ஒவ்வொருவராக குணாளன் வரை வாசித்தாகி விட்டது. அமரன் ஒருவன்தான் பாக்கி. ஆயிற்று, அவனுடைய தெய்வ கானமும் ஆரம்பமாகிவிட்டது. அமரன் தன்னை மறந்தான். மக்களும் தங்களை மறந்தனர். ஆனால் அவன் இசையில் துன்புற்ற ஒரே ஒரு உள்ளம். அவள்தான் கலா. அவள் உள்ளம் வெதும்பியது. மயங்கி விழுந்த அவளை உடனே அழைத்துச் சென்றுவிட்டனர். நேரம் செல்லச் செல்ல அமரன் இசையில் ஓர் வேகம் பிறந்தது. என்றுமே அவன் இவ்வளவு அற்புதமாக வாசித்ததில்லை. ஏதோ ஒரு உணர்ச்சி மனதில் தோன்றி அவனை ஆட்டி வைத்தது.

போட்டி முடிந்துவிட்டது. விக்ரமனின் தீர்ப்பைப் பற்றிக் கூற வேண்டுமா? அமரன் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டான். இனி கலா அமரனுக்கே சொந்தம். இவ்வளவு நேரம் அமரனின் இசையில் இன்புற்ற எல்லோரும் இதை நினைந்த மாத்திரத்தில் வெறுப்பைப் பொழிந்தனர். ஆனால் அமரன், அவன் அமைதியோடிருந்தான். பரிசு அவனுக்கு என்று முடிவாகியதும் அமரன், அனைவர் வெறுப்பையும் பொருட்படுத்தாது பேசத் தொடங்கினான். "அவையினருக்கு வணக்கம். நான் இப்போட்டியில் கலந்துகொண்டது என் கலைச்சிறப்பை வெளியாக்குவதற்காகவே தவிர, கலாவை, அவள் காதலை அழித்து என் உடமையாக்கிக் கொள்வதற்காக வல்ல. என் விருப்பம் நிறைவேறிவிட்டது. எனவே எனக்குப் பரிசாகத் தரப்பட்ட கலாவை நான், என்றோ அவள் உள்ளம் சென்று ஒளிந்துகொண்ட குணாளனுக்குப் பரிசாக அளித்துவிடுகிறேன்." அமரன் பேச்சை நிறுத்தினான். சற்று முன்வரை அனைவர் கண்களுக்கும் கொடியோனாகத் தோற்றமளித்த அமரன் இப்பொழுது கருணையே வடிவினனாகக் காட்சியளித்தான். அவன் கூறிய சொற்கள் அனைவர் மேலும் அமிர்தத் துளிகளை அள்ளிச் சொறிந்தன.

## தசாவதாரம்

**ராமு:—** இன்னிக்கு தசாவதாரம் பூர்த்தியாய் விட்டதுப்பா!...

**சோமு:—** டிராமாவா? சினிமாவா? எந்த தியேட்டரிலே?...

**ராமு:—** அதெல்லாமில்லே...பக்கத்து வீட்டு பங்காருவுக்கு இன்னிக்கு பத்தாவது பெண் பிறந்திருக்கு.

# கருணைக் கடல்

ஸ்ரீமான் T. S. ராஜகோபாலன், B. A., L.T.,

பல ஆண்டுகளுக்கு முன் ஆவராணி என்ற கிராமத்தில் முத்துப்பிள்ளை என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வேளாளர் மரபிலே தோன்றியவர். அவருடைய மூதாதையர், பல தலைமுறைகளாகப் பயிர்த் தொழில் செய்து பாடுபட்டுப் பத்துக்காணி நிலம் சேர்த்து வைத்திருந்தனர். முத்துப்பிள்ளை, தமது சிறு பிராயத்திலே தாய் தந்தையரை இழந்துவிட்டதால், செல்வமாக வளர்ந்து வந்தவர்; அவ்வூரிலுள்ள மக்கள் அவரிடம் தனி அன்பும் இரக்கமுங்காட்டி வந்தனர். நாளடைவில் அவர் மனம்போனபோக்கில் சென்று, தீயோர்களது நட்பும் பெற்று தீய ஒழுக்கங்களையும் மேற்கொண்டார்; வீட்டுத் திண்ணையில் அல்லும் பகலும் நண்பர்களுடன் சூதாடிக் காலத்தை வீணே கழித்து வந்தார். அந்தத் தெருவிலுள்ள பெரியோர்களுக்கு அவரைக் கண்டால் பிடிக்காது; அவரும் அவர்களைக் கண்டு எள்ளி நகைப்பதுமுண்டு.

முத்துப்பிள்ளையின் வீட்டிற்கு அருகில் பெரியதொரு கூரைக் குச்சு இருந்தது. அதில் மாணிக்கஞ்செட்டியார் என்பவர் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்து வாழ்ந்து வந்தார். அவர் நல்குடியில் பிறந்தவரே யாயினும், ஏழையாதலால், அவரை அவ்வூரிலுள்ளோர் மாணிக்கம் என்றே அழைத்து வந்தனர். அவர் சாதாரணமாகக் கல்வி கற்றவரே யாயினும் பிள்ளைகளுக்கு வேண்டியவற்றை நன்கு கற்பிக்கவேண்டிய ஆற்றல் வாய்ந்தவர். அவர் காலையில் எழுந்து துதிப்பாடல்களைப் பாடிக்கொண்டு ஊரை வலம் வந்து, பின்பு நீராடி, அருகிலுள்ள ஆலயத்திற்குச் சென்று இறைவனை அடிதொழுது, மூன்று நாழிகைப் பொழுதிற்குள்ளேயே வீட்டிற்கு வந்துவிடுவார். பின்பு பிள்ளைகளுக்கு முறைப்படி பாடம் சொல்லிக்கொடுப்பார். மாலைப்போதில் தமக்காகவுள்ள இரண்டு காணி நிலத்தையும், குளத்தின் கரையிலுள்ள சிறு தோட்டத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டுச் சூரியன் மறைவதற்குமுன் வீட்டிற்கு வந்துவிடுவார். இருட்ட ஆரம்பித்ததும் ஆலயத்திற்குச் சென்று இறைவனுக்கு எதிரேயுள்ள ஒரு மண்டபத்தில் அமர்ந்து பக்திப் பாடல்கள் பாடிவருவார். ஆலயத்தில் எப்படிப் பழகவேண்டும் என்பதை அவர் நன்கு உணர்ந்தவராகையால், வெட்டிமைப் பேச்சுக்களில் கலந்துகொண்டவரில்லை; காலை நீட்டிப் போட்டுக்கொண்டு அவர் சிறிதேனும் உட்காருவதுமில்லை. அறிவுமிக்கோர், இவரது ஒழுக்கத்திற்காக இவரைப் பாராட்டி வந்தனர்.

முத்துப்பிள்ளைக்கு இவரைக் கண்டால் அறவே பிடிப்பதில்லை. இவர் வேஷதாரி, பிறரை வஞ்சிக்க இவ்வாறு செய்கிறார் என்று யாவரிடமும் இவரைப்பற்றிச் சொல்லுவார்,

எனினும் சில சமயங்களில் இவரைப் பேச அழைப்பார். இவரும் அவர் சொல்லைத் தட்டலாகாது என்று சென்று சிறிது நேரம் பேசிவிட்டு வருவார். "மாணிக்கம்! இன்று ஆலயத்திற்குப் போகவெண்டாமா?" என்பார் முத்துப்பிள்ளை.

"போகவேண்டும்," என்பார் மாணிக்கம்.

"என்ன பக்தி! என்ன பற்று! இன்னும் உன்னைச் சரியாக வைத்தால் நீ என்னதான் செய்யமாட்டாயோ? தினம் இரண்டு வேளையும் போகிருயே; அந்தத் தெய்வம் உனக்கு அள்ளிக் கொடுக்கலாகாதோ?"

"அதுவும் நமது முன்னைப் பழவினையைப் பொறுத்தது. நாம் நல்லது செய்திருந்தால், இப்பிறவியில் நல்ல நிலையில் இருப்போம். ஐயா! நான் சொல்லுவதைக் கேளும். எனக்கு எல்லாப் பிறவிகளிலும் இதே நிலை இருந்தால் போதும்; இறைவனையும் அவனது அடியார்களையும் கண்டால் வெறுப்பு ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பது தான் நான் இறைவனிடம் வேண்டிக்கொள்ளுவது."

செட்டியார் பதில் சொல்லுவதற்குச் சிறிதும் சளைக்கமாட்டார்; தயங்கவும் மாட்டார். அவர் மறுமாற்றம் சொல்லும்போது நடுவில், "போடா, போ, மாணிக்கம். யாரையோ கேட்டு மூளையிலே சேர்த்து வைத்திருக்கிருய் மூட்டை; அதை அப்படியே இங்கு அவிழ்த்து விடுவாய்; நிறுத்து" என்று சொல்லிவிடுவார் முத்துப்பிள்ளை.

முத்துப்பிள்ளை, நாகையிலுள்ள நாடகக் கணிகை ஒருத்தியிடம் காதல் கொண்டிருந்தார். அவர் அடிக்கடி அங்குச் செல்லுவது வழக்கம். சில சமயங்களில் தமது பணியாளனை அழைத்து, "ஏய், ரங்கா! நாகை போய் இதை எல்லாம் அம்மாளிடம் கொடுத்துவிட்டு வா" என்று ஏவுவதுமுண்டு.

ஒருநாள் அஸ்தமித்து மூன்று நாழிகை இருக்கும். அடியார்கள் நால்வர் ஆவராணியை நோக்கி மூட்டை முடிச்சுக்களுடன் நடந்து கொண்டிருந்தனர். அன்று எங்கும் இருட்டாகவே இருந்தது; அவர்கள் செல்லும் ஒற்றையடிப் பாதையில் செல்லுவதுங் கூட பிரயாசைதான். சுற்று வட்டத்தில் சந்தடி சிறிதுமில்லை. அவர்கள் தமக்குள் பேசிக்கொண்டது நெடுந் தூரம் கேட்டது.

"ஓய்; தாஸரே, இவ்வளவு இருட்டு கண்டதே யில்லை."

"சுவாமீ! காலடிகூட சரியாய் தெரியலிங்க."

"இடையாத்தங்குடி பாகவதருக்கு இதெல்லாம் ஒண்ணுமில்லங்க. இவரு, பதியே பரவித் தொழும் தொண்டரு!"

"பாகவதரு ஏன் நின்னுட்டாரு?"

"சுவாமீ, ஏதோ காலடி கேட்டது, திரும்பினேன். ஐயோ! ஐயோ! இதோ ஒருவன் தடியை ஓங்கி வரானே!"

திருடனும் தடியை ஓங்கிய வண்ணம் இவர்களை அணுகினன். பாதையின் பின்னேயிருந்த வளைவிலிருந்து

விளக்கு வெளிச்சம் தெரிந்தது திருடன் தடியைக் கீழே எறிந்து விட்டுப் பறந்தான். சிறிது நேரத்தில் இருவர் முன் நோக்கி வந்துக் கொண்டிருந்தனர்; ஒருவர் முத்துப் பிள்ளை, மற்றவன் ரங்கன். இருவரும் நாகையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தனர். இவர்களைப் பார்த்ததும் அடியார்கள் மனமகிழ்ந்து, தமக்குச் சமயத்தில் இடைத்த உதவிக்காக இறைவனை வாழ்த்தினர்.

அடியார்கள் சற்று விளக்குக்காகத் தாமதித்து நின்றனர். விளக்கு அருகில் வந்ததும், முத்துப்பிள்ளைக்கு நன்றி கூறிவிட்டுப் பின் தொடர்ந்தனர். முத்துப்பிள்ளையோ எனில், "ஆமாம்; சோம்பேறிக் கூட்டம் கோவிலிலே கூடணும்" என்று முணுமுணுத்துக் கொண்டே விரைந்தார்.

முத்துப்பிள்ளையின் வீடு தெற்கு நோக்கி அமைந்திருந்தது. கோடையில் காற்றுக்காக வீட்டிற்கு எதிரில் பெரிய பந்தல் போடப் பெற்றிருந்தது அதில் அவர் எப்போதும் நண்பருடன் அன்பளாவுவார், அல்லது சூதாடுவார். ஒரு சமயம் கடுங் கோடையில் குளங்கள் யாவும் வறண்டிருந்தன. ஆடு மாடுகள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் தவித்தன; புல் வெளிகள் யாவும் தீய்ந்து புழுதி படிந்து கிடந்தன. முத்துப் பிள்ளையின் வீட்டுக் கொல்லையிலுள்ள பெரிய கிணறு ஒன்றிலிருந்து சிறு கால்வாய் மூலமாகக் கூப்பிடு தூரத்திலுள்ள தோட்டத்திற்கு, தினந்தோறும் இரண்டு வேளையும் தண்ணீர் பாய்ச்சுவது வழக்கம்.

ஒரு நாள் இருபது நாழிகையிருக்கும். ஏழெட்டுப் பேர் அவ்வூரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அன்று வெய்யில் மிகவும் கடுமையாகக் காய்ந்தது; நடு வானத்திலிருந்து கீழே தாழும் வெய்யோன் நிலம் முழுதையும் வறுத்து வாட்டிக்கொண்டிருந்தான். பாதையின் ஓரத்தில் இருந்த ஒற்றைப்பனைமரத்தின் மெல்லிய நிழலில் இவர்கள் சிறிது இளைப்பாறத் தங்கினர். எனினும் தாபம் தணியவில்லை. அவர்களது உடல் முழுதும் உரோம கூபங்களாக வேர்வை பெருகியது; உடை நன்றாக நனைந்து விட்டது. ஊர் கூப்பிடு தூரத்திலிருந்ததால் இவர்கள் விரைந்து வந்தனர். வழியில் சிறு கால்வாயில் ஓரிடத்தில் தேங்கியிருந்த தண்ணீரில் காலைத் தாழ்த்தி, பெருமகிழ்ச்சியுடன், "யார் புண்ணியமோ, இது? மகராசர் நன்றா இருக்கணும்" என்று வாழ்த்திவிட்டுப் பின்பு முத்துப் பிள்ளையின் வீட்டு வாசலிலிருந்த பந்தலை விரைந்தனர். இது சிறிது தூரம் எனினும் தரை களிமண் புழுதி படர்ந்திருந்தது; காலை வைத்தால் நெருப்பிலிட்டது போல் பொறிந்துவிடும். இந்தக் கூட்டத்தினர் இந்தப் புழுதி மண்ணில் நடந்த ஆயாசத்தால் பந்தலுட் சென்று காலை நீட்டிச்சாய்ந்துவிட்டனர். மேலே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த முத்துப்பிள்ளைக்கும் அவர்களிடம் சிறிது கருணை ஏற்பட்டது; ஆதலால் அவர் ஒன்றும் சொல்லாது உள்ளே போய் விட்டார். வெளியிலி

ருந்து ரங்கன் மாத்திரம் இவர்களுக்குத் தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்து உதவினன். இக்கூட்டத்தினர் பின்பு ஆலயத்திற்குச் சென்றனர்.


இது நிகழ்ந்து ஒருவாரங் கழித்து, இருட்டுவதற்கு முன்பு ரங்கன் ஓடிவந்து முத்துப் பிள்ளையிடம், "ஐயா, கோயில் பசு தோட்டத்துலே பூந்துடுத்து; வாழக் கண்ணுல்லாம் போச்சுங்க" என்றான். சீறி எழுந்தார் பிள்ளை. கையிலே தடி ஒன்றை எடுத்துக்கொண்டு தோட்டத்தில் புகுந்தார். இவரைக் கண்டதும் மாடு வெளியே ஓடியது. இவர் கோபித்துக்கொண்டு அதைப் பின்தொடர்ந்தார்; அது கோபுர வாயிலுக்கு ஓடியது, இவரும் ஓடினர்; பசு கோயிலைச் சுற்றி ஓடியது; இவரும் சளைக்காமல் கண்ணில் கனற்பொறி பறக்க ஓடினர், தடியை ஓங்கிக்கொண்டு. பசுவின் தலையைத் தடி தாக்கும் சமயம்; இவர் கால் இடறிக் கீழே விழுந்தார். பசு பாய்ந்தோடிற்று; அருகில் ஒருவருமில்லை. இவர் நெடுநேரம் மூர்ச்சையாகக் கிடந்தார்.

இரவு நாழிகை ஐந்திருக்கும். மாணிக்கஞ் செட்டியார் வழக்கம்போல் கோயிலில் ஜயவிஜயர்களது வாசலுக்கு வெளியில் உட்கார்ந்துகொண்டு கண்ணுங் கண்ணீருமாக,

**"இத்தனை அடிய ரானுர்க்கு**
**(இ)ரங்குநம் அரங்க னுய**
**பித்தனைப் பெற்றும் (அ)ந்தோ**
**பிறவியுட் பிணங்கு மாறே!"**

என்று பாடிக் கொண்டிருந்தார். "அடியேன், அடியேன்!" என்று குரல் கேட்டுச் செட்டியார் உற்று நோக்கினர். எதிரில் முத்துப் பிள்ளை வேரற்ற மரம்போல் விழுந்து வணங்கிக் கொண்டிருந்தார். செட்டியார் அவரைத் தமது கைகளால் எழுப்பி நிற்கச் செய்தார். அவரது முகத்தைப் பார்த்ததும் செட்டியார் தம் கண்களையே நம்பவில்லை. முத்துப் பிள்ளை நன்றாக நீராடி நெற்றியில் திருமண் அணிந்திருந்தார்.

"நான் காண்பது கனவா?" என்றார் செட்டியார்.



பையன்: அப்பா! வாசல்லே முன் குடுமியாரே, முக்கண்ணு சாமியாரே, ஒரே வெட்டு இரண்டே துண்டு! வந்திருக்கு, வேணுமா?

தந்தை: என்னது?...

[ராஜஙமணா : [illegible]]

"இல்லை; இனி உம்மை நான் உரிய மரியாதைப்படியே கூப்பிடுவேன்; நீர் உத்தமர், மாந்தருள் மாணிக்கம்" என்றார் பிள்ளை.

"என்ன, இப்போது புதுமை வந்துவிட்டது?"

"சொல்லுகிறேன், கேளும். இன்று கோயில் பசு தோட்டத்தில் சென்றதென்று சிறிது அதை அடிப்பதற்காகப் பின் தொடர்ந்து சென்றேன். அது கோயிலின் வாசலுக்கு வந்தது; நான் அங்கும் வந்தேன்; பின்பு கோயிலைச் சுற்றி வலமாக ஓடிற்று; நானும் பின்னே விரைந்தேன் அதை அடிப்பதற்காக. பின்பு என்னை அறியாமல் நெடுங்காலம் கிடந்தேன். இந்த ரங்கநாதனது சந்நிதியில் நிற்பதுபோல் தோன்றியது எனக்கு. ஆலயம் முழுதும் எங்கும் விளக்குகள் நிறைந்திருந்தன. பொன் போன்ற மேனியையுடைய ஒருவர் கையில் பொற்பிரம்பு தாங்கி, என்னை இறைவனது முன்னே நிறுத்தினார். இறைவனது திருமுக மண்டலம் சோதி பொலிந்திருந்தது; பவளம் போன்ற உதடுகள் சிறிதே திறந்தன. 'என் ஊரைச் சொன்னாய்!' என்று அவன் வாயிலிருந்து சொற்கள் பொன் மணியின் ஒலிபோல் வெளிவந்தன; என் கண்ணில் பட்டது நான் விரும்பும் நாகை. 'என் பேரைச் சொன்னாய்!' என்றான் பின்பு; எதிரில் என்னுடைய பணியாள் ரங்கனை நான் விளித்து வேலை வாங்குவது போல் தோன்றியது. 'அடியாரை நோக்கினாய்' என்பது கேட்டேன்; அன்று ஒரு நாள் இரவில் என்னுடைய விளக்கின் வெளிச்சத்தால் திருடனிடமிருந்து தப்பிய அடியார் நால்வர் மூலையில் இருட்டில் நின்று என்னை நோக்கிக் கும்பிடக் கண்டேன். நான் அவர்களை உண்மையாக வெறுத்தேன்..."

"பதைக்க வேண்டாம்; மேலும் சொல்லுங்கள்; பின்னும் என்ன நிகழ்ந்தது?"

"நான் வியப்புடன் நின்றேன். மறுபடியும் இறைவன், 'அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்கள் ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்!' என்றான். சென்ற வாரம் கடும் வெயிலில் நடந்து வந்தவர்கள் நமது வீட்டுப் பந்தலில் தங்கினார், ரங்கன்தான் அவர்களுக்குத் தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்தான். இதே கூட்டத்தினர் எனக்கு முன்பு என்னை நோக்கிப் புன்முறுவல் பூப்க நிற்பதையும் கண்டேன்; அவர்களுள் ஒருவர் என்னைச் சுட்டிக் காட்டி, 'இவரது கால்வாயில் தான் காலை நனைத்தோம்!' என்றார். கடைசியாக, 'என் கோயிலை வலம் வந்தாய்!' என்றான் ஈசன். இது ஏனனமா என்பதுதான் தோன்றவில்லை. நானாக வலம் வரவில்லை, பசுவை அடித்துச் சினம் தீர்பதற்காகவே அதன் பின் சென்றேன்; அது வலமாகப் போயிற்று; வலம் வந்தது பசு; நான் இல்லை, நான் இல்லை; பசு, பசு!" என்று சாய்ந்தார் பிள்ளை.

சிறிது நேரங் கழித்து, அவர் செட்டியாரை நோக்கி, "நீர் புண்ணியவான். உம்மை அரங்கனது திருவடி வாரத்தில்


அவனுக்குத் திருவாலவட்டம் பறிமாறக் கண்டேன்'' என்றூர் பிள்ளை.

செட்டியாரது மேனி முழுதும் மயிர்க்கூச் செடுத்தது; அவரது கண்கள் தாரை தாரையாக நீரைச் சொரிந்தன. "என்ன கருணை, கருணை! அரங்கனுயக பித்தன் என்பது உண்மையாயிற்றே. உன்னுடைய அருளன்றோ அருள்!'' என்று கூவினுர். ஆலயத்தில் வழிபாடு செய்ய வந்திருந்த அடியார்கள் இருவரையும் சூழ்ந்துகொண்டனர். செட்டியார், "பெருமானே, உன் அடியார்க்கு என் செய்வன் என்றே நீ இருப்பாய்; அடியாரல்லாதவர்களைக் குளிர நோக்கி, 'என் ஊரைச் சொன்னுய், என் பேரைச் சொன்னுய்; என் அடியாரை நோக்கினுய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்' என்றுப்போலே சிலவற்றை ஏறிட்டு மடிமாங்காயிட்டு, பொன் வாணியன் பொன்னை உரைகல்லிலே உரைத்து மெழுகாலே எடுத்துக் கால் கழஞ்சு என்று திரட்டுமா போலே ஜன்ம பரம்பரைகள் தோறும் செய்யும் குற்றங்களையும் நற்றங்களாக கொண்டு, அவற்றை ஒன்று பத்தாக்கிக்கொண்டு நீ சுரக்கும் அருளன்றோ அருள்? நீயன்றோ கருணைக் கடல்!'' என்று கதறினுர்.

★

## வேதனை வேடிப்பு

கால் கடுக்க கடுந்தூரம் நடந்த
நான் கை வலிக்க உன்னைச் சுமந்து
சென்று 'அப்பாடா' என்று அமரும்
தருணத்தில் வியர்வை வெள்ளமாய்
பொங்கும் என் உடலையும் நோக்காது
பாக்கியம் செய்த அந்த அடுப்பிற்கு
குளிர்ந்த காற்றை அள்ளி வீச என்
அருமை மனைவி ஆதாரத்தோடு
அணைத்துச் செல்கிருளே விசிறியே ! நீயே
சொல். பாக்கியசாலி அந்த அடுப்பா?
நானு ?




## ★ முன்னுரை ★

**வசுமதி ராமசுவாமி**

குளத்தின்மேல் அழகிய தாமரைகளைப் பார்க்க வரும் ஆதவனைக் கண்டு மகிழ்ந்து மலருகிறது. அதைப் பார்க்கும்போது நம் உள்ளமும், முகமும் மலருகின்றது. அதற்கு அடியில் ஆதாரமாக இருக்கும் தண்டைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டும். அடித்தண்டு இன்றி தாமரை மலராது. மரத்தில் பூவும் காயும் பிஞ்சுமாக இருக்கிறது. குலுங்கி எவ்வளவு அழகாக இருக்கிறதென்று நினைக்கிறோம். ஆனால் அடியில் இருக்கும் வேர் இன்றி மரம் நிற்காது.

கலங்கரை விளக்கின் ஒளியைக் கண்டு திசைதப்பிச் செல்லாமல் மாலுமிகள் கரைசேருகின்றார்கள். சிலர் வழிதவறிக் கொஞ்ச தூரம் போனாலும் கரையிலுள்ள தீபம் வழிகாட்டுகிறது. அந்த வழிகாட்டியான தீபத்தைத் தாங்கி நிற்பது ஒரு தூண். ஸ்தம்பம்.

தீபஸ்தம்பம் என்ற அழகிய பெயருடைய கதையை ஒரே நாளில் சேர்ந்தாற்போல் படித்தேன். சின்னப்பெண் ஓடிவிளையாடும் வயது, அநுபவமற்ற சிறுமியா இவ்வளவு அழகாக எழுதியிருக்கிறாள் என்று வியந்தேன். ஆனால் சில நிமிஷங்களுக்குத்தான். பிறகு மூன்று தலைமுறைகளாக வழி வழியாக வந்த கலை உணர்ச்சி, இலக்கியச் சுவை கூடப் பிறந்திருக்கிறது என்பதை நினைவுற்றேன்.

தமிழ்நாட்டில் கதை பூங்காவனத்தில் பெண்களில் முதலாவதாகச் சென்றவர் ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள். வை. மு. கோவின் நவீனங்கள் இல்லாத வாசகசாலைகள், புத்தகக் கடைகள் கிடையாது. எவ்வளவு விதமான அமைப்புகள் (ப்ளாட்) உண்டோ அவ்வளவையும் கதைகளாக எழுதிக் குவித்திருந்தார்கள். . அவைகள் பொழுதுபோக்கிற்காகவோ, வியாபாரத்திற்காகவோ எழுதப்பட்ட கதைகள் அல்ல. அவ்வப்போது

சமூகத்திலுள்ள ஊழல்களைக் கண்டித்திருப்பார், நல்ல கருத்துக் களைப் பதித்திருப்பார், தியாகம், பக்தி, ஒழுக்கம் இப்படியாக நல்ல பிரசாரங்களை கதைகள் மூலமாகச் செய்திருப்பார். அடுத்த படியாக ஆழ்வாராதிகளின் அம்சம் பெற்று சீலமும், பக்தியும் உருக்கொண்ட உத்தமர் வை. மு. ஸ்ரீனிவாஸன் அவர்களுடைய கதைகள் உள்ளமும் உரையும் அன்புங்கலந்தவை. இம்மாதிரி யான சித்திரத் தூணில் ஏற்பட்ட தீபஸ்தம்ப ஒளி பிரகாசிப்பது மன மகிழ்ச்சியை அளிக்கிறது.

திருமகளை ஸ்துதி செய்யும்போது கூட தாமரையில் உதித்த வளே என்று அவருடைய பிறப்பை முன்னால் சொல்லுகிறோம். அந்த லோகமாதாவின் பெயரைக்கொண்டு விளங்கும் குமாரி விஜயலக்ஷ்மியின் பிறப்பையும் அறிமுகம் செய்வது பொருத்த மாக இருக்கும் என நினைக்கிறேன். வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சார் போன்ற மகா மேதையின் குடும்பத்தில் பிறந்தவள். இது முதல் கதை என்று அறிகிறோம். விஜயலக்ஷ்மி என்ற அழகிய பெயரைக்கொண்ட ஆசிரியை முதல் கதையிலேயே முதல்தர வெற்றியை அடைந்திருக்கிறாள் என்பதில் சந்தேக மில்லை.

'தீபஸ்தம்பம்' என்ற இந்தக் கதை அழகிய கருத்துடைய தாக அமைந்திருக்கிறது. வேலைக்கார முத்து தியாகத்தின் சிகரம். எசமான் விசுவாசத்திற்காகக் கண்ணையே பறிகொடுக் கிறான். வள்ளி கணவனைவிட விசுவாசத்தில் குறைந்தவளல்ல. தன் கர்ப்பம் கலங்கினதைக்கூட அவள் தாய் உள்ளம் பொறுத்துக்கொள்கிறது. குடும்பத்தில் சிற்றன்னைக்கும் மற்ற வர்களுக்கும் நல்லவராக அன்பின் உருவாக இருக்கும் உத்தம குமாரன். அகங்காரத்தில் கெட்டு அலையும் பிள்ளை. அடக்கமற்ற பெண். இப்படியாக அநேக குணசித்திரங்களை வைத்துப் பின்னப் பட்ட உயர்ந்த கதை. பெரியோர்களுக்கு அடங்கி உத்தமமாக வாழவேணுமென்ற கருத்து அமைந்திருக்கின்றது. இந்தக் கலை மகளின் பரிபூரண கடாக்ஷம் பெற்று இதைப்போன்ற அநேகக் கதைகள் எழுதி எல்லோரையும் மகிழ்விக்க வேணுமென்று பிரார்த்திக்கிறேன்.


வை. மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம்

வை. மு. விஜயலக்ஷ்மி எழுதியது

ஸ்ரீமதி வசுமதி ராமசுவாமி அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. டிம்மி அளவில் 350-க்கு மேற்பட்ட பக்கங்களும் பல படங்களும் கூடிய புத்தகம்.

விலை ரூ. 4.

# ஜல் ஜல்

**வை. மு. விஜயலக்ஷ்மி**

★

"ஜல்....ஜல்....ஜல்" என்ற சதங்கை யொலியும், யாழ் ஒலி தோற்ற கானமும் காற்ருேடு கலந்து மிதந்து வந்தன.

இதைத் தொடர்ந்து ஒரு ப்ரம்மாண்டமான கட்டிடத்திலிருந்து "ஹ ... ஹை ... இதோ பாருங்கடா! இப்படி ஜன்னல் வழியே! என்ன அழகு! ஆஹா! ப்ரமாதம் பாட்டு. உடம்பைப் பார்த்தாயா? எப்படி ரப்பர்போல் வளைகிறது. கஷ்டமில்லாமல், நஷ்டமில்லாமல் நமக்குக் கிடைத்தது இளங்கனி" என்ற குரலும் ப்ரதிபலித்தது.

நாட்டியமாடியது வீட்டிலா? அல்ல. தெருவில் பன்னிரண்டு வயது மதிக்கத் தக்க துறுதுறுப்பான களை பொருந்திய வதனத்தை யுடைய, ஒரு சிறுமி தனக்கு தெரிந்தபடி கை, கால்களை ஆட்டி, வயிறு வளர்க்க வழி செய்து கொண்டிருந்தாள். என்ன அழகிருந்தாலும், அவளது கெஞ்சும் கண்களும், முகத்தில் ஓடும் சோக ரேகைகளும், ஏழ்மை நிலைமையை பளிங்குக் கண்ணாடி போல் பறைசாற்றின.

"பிச்சை எடுத்தாலும் சுட்டியாகத்தோன்றும் இப்பெண்ணை வைத்தே நம் கதையை அமைத்து விடலாம். வேறு நடிகர்களென்ருல் சுளை சுளையாகப் பணத்தை எண்ண வேண்டாமா? டேய் சீதாபதி! இந்தச் சூழ்நிலையை அமைத்தே ஒரு அழகான கதையை சிருஷ்டி செய்துவிடு. அந்தப் பெண்ணை ஏற்பாடு செய்வது என் பொறுப்பு"

"எல்லாம் சரிதான். இந்த காலத்தில் ப்ரபலமான நடிகைகள் நடிக்கும், அதுவும் அடிக்கடி அவ்வானுலகில் மின்னும் நக்ஷத்திரத்தைத் தான்—அவள் தோன்றும் படத்தைத்தான் விரும்புகிருர்கள். முன்பின்கூடப் பேர் கேட்டறியாத ஒரு நபரைப் புகுத்தினல் எல்லாம் சுழித்துக் கொண்டு போய்விடப் போகிறது. நன்ருக யோசனை செய்!!

"ம்...என்ன இது புதியதாக ஏதாவது ஒரு ப்ரச்னையைக் கிளப்பிவிடுகிருய்!.... ஆம் பேஷான யோசனை. இந்தப் பெண் அங்கு ஆடியவள், இங்கு பாடியவள். இதில் பரிசு பெற்றவள் என்று பலமான விளம்பரம் செய்வதோடு, மேக்கப்பைக் கனஜோராக அமைத்து விட்டால் வெற்றி நமக்குத் தான். யார் கண்டார்கள் உள் மர்மத்தை?" என்று விளாசியது ஒரு குரல்.

183216

"நாம் பேசி முடிப்பதற்குள் அந்தப் பெண் ஓடிவிடப் போகிறது. ஏ! பையன், கூப்பிடுடா அந்தக் குட்டியை" என்று உத்தரவும் பிறந்தது.

"பாப்பா! பாப்பா! இங்கு வா" என்றழைத்தான் பையன்.

அதற்குள் "சார்! அ... அது பார்க்கும் பார்வையின் கூர்மை! மிரளுவது எல்லாம் எப்படி இருக்கிறது. பெயர் போன நடிகைகள் எல்லாம் தோற்றனர். அதன் கருவிழிகளையும், கதுப்புக் கன்னத்தையும்... ஆ.... ஏழ்மை மூடியிருந்தாலும் அதன் உடல் எப்படித் தக தக வென்று மின்னுகிறது" என்று ஒருவன் தன் நண்பனிடம் வர்ணிக்கத் தொடங்கினான்.

பையன் அழைத்தது பலனளிக்காது போகவே "குழந்தை வாம்மா" என்று மறுமொருமுறை குழைந்தான். ஆனால் அந்தச் சிறுமியோ தலைமுதல் கால்வரை ஒரே நடுங்கலாக நடுங்க, அச்சம் கவிந்த முகத்தோடு "நீ யார்? எதற்காக என்னைக் கூப்பிட்டாய்? நான் வரமுடியாது போ" என்றவாறு ஓட்டம் எடுத்தாள்.

மேற்குறித்த சம்பாஷணையின் மூலம், இவர்கள் ஒரு நாடகக் குழுவையோ, சினிமா வட்டாரத்தையோ சேர்ந்தவர்கள் என்பது யோசிக்காமல் சொல்லக் கூடிய பதில்.

அக் குழுவின் தலைவன் "பையா! பின்னாலேயே ஓடு. அந்தப் பெண் எங்கு போகிறது? என்ன செய்கிறது என்பதைத் தெரிந்து வா" என்று உத்திரவிட்டான்.

போன பையன் திரும்புவதற்குள்ளேயே அந்த டைரெக்டர் மற்ற இருவரையும் சைக்கிளில் துரத்தினான். "சிறிய பெண்ணை கையால் பயந்து ஓடிவிட்டது. நீங்கள் சீக்கிரம் ஜயத்துடன் திரும்புங்கள். அதற்குள் நாங்கள் கதையை யோசித்துத் தயார் செய்து விடுகிறோம்" என்றும் எச்சரித்தான்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்களைத் தடுத்து நிறுத்தினான் எதிரில் தலை தெறிக்க ஓடிவந்த பையன், "சார்! சார்! அந்த பொண்ணு ஒரு சந்தில் ஒரு குடிசையில் போய் நுழைந்துதுங்க. நம்ப வீட்டு வாசலிலே ஓட்டம் எடுத்த பொண்ணு அங்கே போயித்தான் மூச்சு விட்டது" என்று அறிவித்தான்.

"அப்படியா! அந்தக் குடிசையில் வேறு யாராவது இருக்கிறார்களா ?!

"ஒரு அம்மா, நோயாளி போல படுத்து இருக்காங்க. இந்தப் பொண்ணு அவங்களைக் கட்டிக்கினு அழுது சார்"

"ஒருவேளை அந்தக் குட்டியின் அம்மாவாக இருக்கும். நாங்கள் இங்கேயே நிற்கிறோம். நீ மறுபடியும் போய் 'உங்களைப் பார்க்க யாரோ பெரிய மனுஷர் வந்திருக்கிறார்' என்று அழைத்துவா"

"அம்மா! அம்மா!..."

"யாரப்பா.... ஹேமா! போய்ப் பார்" என்றாள் அந்த மூதாட்டி.

"நான் இந்த ஊர்தான். உங்களைப் பார்க்க யாரோ பெரிய மனுஷர் வந்திருக்கிறார்...கொஞ்சம் வருகிறீர்களா?"

"என்ன! பெரிய மனுஷரா? என்னைப் பார்க்க இருக்காது தம்பி. வீடு தவறி வந்திருப்பார்கள். தெருப்பக்கம் போய் விசாரி..."

இல்லையம்மா... உங்களையேதான் பார்க்க வேண்டுமாம். எனக்குத் தெரியும்"

அதற்குள் அந்த பெண் ஹீனஸ்வரத்தில் "அம்மா! என்னை கூப்பிட்டான் என்று சொன்னேனே அவனாக இருக்குமோ. எனக்கு பயமாக இருக்கும்மா" என்றாள் உதறலோடு.

"பயமென்னம்மா நான் இருக்கையில். தம்பீ!....எங்களை எந்த பெரிய மனுஷரும் பார்க்க வேண்டாம். மேலும் நானும் அங்குவரும் நிலையில் இல்லை."

"என்னம்மா விஷயம் தெரியாமல் பேசறீங்க. உங்களுக்கு அதிர்ஷ்ட மழை பெய்யப் போகுது. அதை உதறித் தள்ளுகிறீங்களே. அவரையே இங்கே கூட்டி வந்துவிடுகிறேன்."

"ஹும்........அதிர்ஷ்ட மழையா?...மழை பெய்ய வேண்டிய பாக்கியே இல்லை. இத்தனை நாளாகப் பெய்த மழையில் இதோ மிதந்து கொண்டிருக்கிறோம். இது போதும். இனி வேண்டாம். மேலும் எங்கள் வீட்டிற்கு பெரிய மனுஷர் வர லாயக்கில்லை. நின்றால் கூரை இடிக்கும், உட்கார்ந்தால் மண் ஒட்டிக்கொள்ளும்."

'நாமே போய் எஜமானை அழைத்து வரலாம்' என்றெண்ணியபடியே திரும்பிய பையன், அவர்களே அங்கு வந்துவிட்டதைக் கண்டு நடந்த விஷயத்தை விளக்கினான்.

குடிசையில் காலடி எடுத்து வைத்தவனைக் கண்டு அப்பெண் தாயோடு ஒட்டிக்கொண்டாள். சென்றவன், "அம்மா....டாக்ஸி கொண்டு வருகிறேன். நீங்கள் மெதுவாக எழுந்து எங்கள் இருப்பிடத்திற்கு வந்துவிட வேண்டும்" என்றான் விநயமாக.

அவனைப் பார்த்ததும், பெண் தன்னோடு ஒட்டிக் கொள்வதால், 'இவன்தான் அழைத்தவனாக இருப்பான்!

என்று ஊகித்துக்கொண்டதாய், "டாக்ஸி!...அதில் வருவதா. அப்படிப்பட்ட கசடாக்கள் இல்லை நாங்கள்" என்றாள் வெட்டித் தறித்தாற்போல்.

இவள் பேச்சைக் கேட்டு வந்தவன் சிறிது திகைத்தானே தவிர, தொடர்ந்து, "என்னம்மா, டாக்ஸியில் வந்தால் கசடா என்று அர்த்தமா? கௌரவத்திற்காக காரில் போவார்கள். இதில் என்ன தவறு?" என்றான்.

"இப்போது இருக்கும் கௌரவம் நிலைத்தால் போதும், புது கௌரவமும் முளைக்க வேண்டாம். புதிய மனிதர்களின் சகவாசமும் வேண்டாம்."

"நீங்கள் இப்படியெல்லாம் பேசுகிறீர்களே. ஆனால் நிலைமட்டும் ஏன் இப்படி இருக்கிறது. இவ்வளவு நிர்தாக்ஷண்யமாகப் பேசக் கூடாது. நீங்கள் இப்படி கஷ்டப்படும் நிலையிலிருந்து நல்ல நிலைக்குக் கொண்டு வரவே, எங்கும் போகாதவர்கள், இங்கு வந்திருக்கிறோம். உங்கள் பெண் எங்கள் எதிர்வீட்டு வாயிலில் நாட்டிய மாடிக் கொண்டிருந்தாள். இதோ பாருங்கள், அவளுக்குக் கொடுக்க எடுத்த பத்து ரூபாய்" என்றவன் சுற்றும் முற்றும் பார்த்தான். அவன் வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் வெளிப்பட்ட புகை, அச் சிறு குடிசையை மேக மண்டலமாக்கிக் கொண்டிருந்தது.

அவனைப் பார்க்கவே அவளுக்கு வெறுப்பாகவும், அச்சமாகவும் இருந்தது. அதற்கேற்ப ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாதவாறு, அச் சிறிய குடிசை இருளைக் கக்கி துணைபுரிந்தது. அவன் பேசுவது எதற்கும் பதில் பேசாது படுத்திருந்தாள்.

சுழன்ற கண்கள் அங்கு அமர ஆசனமில்லாததை அறிவித்தது. தரையிலும் உட்காரப் பிடிக்காது, கதவு என்று அவர்கள் பாவிக்கும் தட்டியில் சாய்ந்தவாறு நின்றிருந்தான்.

சுற்றி வளைத்து பேசியவன், "ஏனம்மா, பேசாமல் இருக்கிறீர்கள். நீங்கள் இப்படியே, இந்த நிலையிலேயே இருந்தால் உங்கள் குழந்தையின் அழகும், கலைஞானமும், கடலில் கரைத்த சர்க்கரையாய் அல்லவா போய்விடும்? உங்களுக்கும் நிம்மதி கிடையாது. அவளை உலகம் முழுதும் ப்ரகாசிக்க செய்யும்படியான சினிமாக்காரர்கள் நாங்கள்..." என்றதுதான் தாமதம் அவளை மின்சாரம் தாக்கியதுபோல் துள்ளினாள்.

"ஐயோ....சினிமாக்காரர்களா...வேண்டாம். வேண்டவே வேண்டாம். ஐயோ என் வாழ்வு? அந்த சினிமாக்காரர்களால்தானே

பாழாகியது....'' என்றவள் மேலே பேசவில்லை. அவள் நினைவுத் திரை மீது பழைய சம்பவங்கள் படங்களாக விசுவரூபம் எடுத்தன.

...நல்ல நிலையில் அன்பான கணவனும், செல்வக் குழந்தையும், ஐச்வர்யமும் நிறைந்து குறைவற்ற கொழுந்தாகத்தான் அவள் இருந்தாள். பாழும் விதி யாரை விடுகிறது? அவளது கணவன் சகவாஸ தோஷத்தினால் பல துறைகளில் கெட்டு, கடைசியில் சினிமாவைச் சேர்ந்தவர்களின் சிநேகமும் உண்டாகி பணத்தோடு, குணமும் அழிந்தது.

இதே துக்கத்தில் வீட்டிலிருக்க பிடிக்காமல் தன் குழந்தையுடன் வெளியேறி, ஊர் ஊராக அலைந்து பல வாறாகக் கஷ்டப்பட்டு, சில வீடுகளில் வேலை செய்து தன் ஒரே மூலதனமானக் குழந்தையை காப்பாற்றி வந்தாள். அதற்கும் தடையாக இப்படி படுக்க நேரவே குழந்தையைப் பிச்சையெடுத்துவர அனுப்பினாள்.

'ஐயோ! கடவுளே. பல ஊர் மாறியும் இந்த ஊரிலும் அக்குழந்தை போவதற்கும் ஏதாவது பங்கம் வைக்கிறாயே. நீயே என்னைக் கண் திறந்து பார்க்கவில்லை. பார்க்கவும் போவதில்லை. அப்படியிருக்க இவர்கள் பார்த்துதானா எனக்கு விடிவு ஏற்படப் போகிறது. அது ஒன்றும் இல்லை. ஹூம் ... என் குழந்தையின் அழகும், ஞானமும் பாழாய் போகிறதாம். சினிமாவில் சேர்ந்தால் இவ்விரண்டும் உபயோகப்படும் என்று கூறுகிறானே. அதற்கு மறுபுறத்தில் இழிவு பேச்சும் மலை போல ஏறிக்கொண்டே போகுமே அது தெரியவில்லை. பணம்தானா ப்ரதானம்? என்னைப் பாழாக்கிய இந்தத் துறைக்கு என் கண்மணியை இறையாக்காதே' என்ற பல சுழல்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள்.

மன வேதனையினாலேயே அணு அணுவாகச் சிதைந்திருந்த அவள் உள்ளம் எதிர்பாராது ஏற்பட்ட இந்தத் தாக்குதலினால் அதிகமாக பாதிக்கப்பட்டு, அவள் உதிரமே உறைந்துவிடும் போன்ற நிலைக்கு வந்துவிட்டது. திடீரென்று ஏதோ தீர்மானம் செய்தவள்போல் கண்ணைத் திறந்தாள்.


திறந்தவள், இன்னும் வந்தவன் அதே நிலையில் நின்றிருப்பதைப் பார்த்து, ஆவேசம் வந்தவள் போல் தன் தேக நிலையையும் மறந்து எழுந்தாள். திறந்திருந்த தட்டியின் வழியாக கிழித்துக்கொண்டு வந்த ஒளி அவள் முகத்தின் மீது பளீரென அடித்தது. வெளிச்சத்தில் இருவர் முக

மும் விவரமாகத் தெரியவே ஒருவரைப் பார்த்து ஒருவர் அதிர்ச்சியடைந்தனர்.

அவளது சப்த நாடியும் அடங்கிவிட்டது. அச்சமயத்திலும் 'தடால்' என்று நின்றிருந்தவன் காலில் விழுந்தாள். பக்கத்திலிருந்த தன் குழந்தையைக் கட்டி தழுவி, "ஹேமா! இதோ உன் அப்பா. இவர் தானம்மா. போ அவரிடம். பத்திரம் குழந்தை பத்திரம். உங்களிடம் ஒப்படைத்துவிட்டேன். சினிமாவில் மட்டும் சேர்த்து அவள் வாழ்க்கையைக் குலைக்காதீர்கள். நல்ல முறையில் காப்பாற்றுங்கள். பத்திரம்"—மடமடவென்று கூற வேண்டியவைகளை கூறினாள்.

இதற்குதான் காத்திருந்ததுபோல், இவ் வார்த்தைகள் முடிந்ததும் அவள் உடல் வெட்டிச் சாய்த்த மரம் போல் சாய்ந்தது. தன் அம்மாவே 'அப்பா இவர்தான்' என்று கூறியிருந்தும் நம்பிக்கை படவில்லை. "ஐயோ! அம்மா" என்றே கதறினாள் ஹேமா.

கூட வந்திருந்தவர்கள் இருவரும் குழம்பி கற்சிலையாய் நின்றனர். அவனை—ஹேமாவின் தந்தையை—அதிர்ச்சியும், மனசாட்சியே குத்திக் காட்டி பரிகசிப்பதனால் ஏற்பட்ட அவமானமும் சேர்ந்துகண்ணீரைப்பொழிய வைத்தன. அவன் இதுநாள்வரை செய்த தவறுகள்





எல்லாம் அக் கண்ணீரில் கரைந்து ஓடுவது போல் ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

மறு நிமிஷம் கீழே துண்டு கிடந்த ஹேமாவை அள்ளி அணைத்துக் கொண்டான். தொடர்ந்து "ஹேமா"என்ற அலறல்தான் எதிரொலித்து அவ்வட்டாரத்தையே கிடுகிடுக்க வைத்தது.

# ★ சொல்லட்டுமா! ★

**ஹாஸ்ய நடிகர் ஸ்ரீ L. நாராயணராவ்**

மோகினி வாசகர்களுக்கு நமஸ்காரம். 58-வது வருடப் புத்தாண்டு கடவுள் கிருபையால் நம் எல்லோருக்கும் மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டுமென்றுப்ரார்த்தனையைச் செய்துகொண்டு என் சரிதையைச் சொல்லட்டுமா? என்று உங்களைக் கேட்கிறேன். 'ஓ! சொல்லுங்கள் சொல்லுங்கள்' என்ற ஒலி எனக்கு நாலாபக்கத்திலிருந்தும் கேட்கிறது. சொல்லுகிறேன் கேளுங்கள்.



என்னுடைய வயது இப்போது 63. இவ் வயதிலிருந்து 5-வது வயதிற்குத் தாவப் போகிறேன். இடையே பல்டி அடிக்காமல் நேராகச் செல்ல கடவுள் துணை புரிய வேண்டும்.

சின்ன தாராபுரம் என்பது என்னுடைய சொந்த ஊர். என்னை என் வீட்டிலோ, தெரிந்தவர்களோ தேவா என்றுதான் அழைப்பார்கள். அன்று எனக்கு அக்ஷராப்யாசம். கனவு கண்டதுபோல் நினைவிருக்கிறது. எங்கள் வீட்டில் ஒரே தடபுடல். எனக்குக் குடுமி வைத்து ராக்கொடி, ஜடைக் கொச்சு எல்லாம் வைத்துத் தலைப்பின்னி, தலைநிறையப் பூவைச் சுற்றி, நகைகளை வாரிப்போட்டு அலங்காரம் செய்திருந்தார்கள். அடடா! இப்போது 47-ம் வருடம் சுதந்திரம் வந்த அன்று கூட அவ்வளவு சந்தோஷம் அடைந்தேனோ, இல்லையோ. அன்றைய தினம் சாம்ராஜ்ய பட்டாபிஷேகமே எனக்கு ஆய் விட்டது போன்ற பெருமை, கர்வம், துடிதுடிப்பு, படபடப்பு எல்லாம் ஒன்றுகூடி என்னைக் குதிக்கச்செய்தது. இதற்கு சிகரம் வைத்தது போல ஒரு மாலையும் என் கழுத்தில் போட்டு, வாசலில் மேளமும் அடிக்கிறது என்றால் இதற்குமேல் கேட்கவா வேண்டும். அந்த உணர்ச்சியை விவரித்து எழுத இப்போது என்னால் முடியவில்லை.

என்னைவிட வயதில் ஒன்றிரண்டுக்கு மேலாகிய என் சிநேகிதர்கள் என்னை விடச் சிறியவர்கள் எல்லோரும்

அங்கு கூடியிருந்தார்கள். அவர்களைப் பார்க்கும் போதுதான் என்னுடைய பெருமையும் பூரிப்பும் ஆயிர மாயிர மடங்காகப் பொங் கியது. "டேய்! இன்று நான் கல்யாணப்பிள்ளை. உங்களுடன் விளையாட வர மாட்டேன். ஏன் பேசக்கூட மாட்டேன்! ஆமாம் நீங்கள் லட்டும் பாயசமும் சாப்பிடுங் கள்' என்று நான் கூறியது நன்ருக நினைவிருக்கிறது. என் பாட்டி தனது அன் பைப் பூராவும் காட்டி 'தேவு ராஜாமாதிரி இருக்கேடா கண்ணு! நீ நன்னு படிச்சு நம்ம வெங்கிட்டு மாமாவைப் போல உத்தியோகம் பண் ணிப் ப்ரமாதமாயிருக்கணும் என்று வாழ்த்தினர்.

யார் யாரோ எனக்கு ரூபாய்கள் பரிசு கொடுத் தார்கள். என் பெற்ருேர் கள் என்னுடன் மணையில் உட்கார்ந்தார்கள். ஏதே தோ மந்திரங்களைப் புரோ கிதர் சொல்லிய பிறகு என் கை விரலுக்குச் சிறிய தங்க மோதிரத்தைப் போட்டு விட்டு நெல்லில் எழுதச் சொன்னர்கள். எழுதி னேன். பிறகு மேளத்துடன் பள்ளிக்கூடத்திற்கு ஊர்வல மாக அழைத்துச் சென்ருர் கள்.

பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகள் எல்லாம் என் னைச் சூழ்ந்துகொண்டு கும்ம லாகப் பார்த்தார்கள். என் னுடைய பெருமையைக் கேட்க வேண்டுமா? ஒருவித மான முறைப்புடன் நின் றேன். எந்த வாத்தியார் எனக்கு அக்ஷராப்யாஸம் செய்ய வந்தாரோ அவரைக் கண்டால் எனக்கு ஏற் கனவே பிடிக்காது. ஏன் தெரியுமா? அவர் மிகவும் கோபக்காரர். வகுப்பில் அடிப்பதாக வேறு கேள் விப்பட்டிருக்கிறேன். அவ ரைப் பார்த்த உடனே அவ ரிடம் படிக்கமாட்டேன். பள்ளிக்கு போகமாட்டேன். என்று அழுதேன் வெட்கமே தெரியவில்லை. என் தகப்பனு ரும் மாமாவும் எத்தனையோ சமாதானம்செய்துதின்பண் டங்களைக் கொடுத்து ஒரு தினுசாக அழுகையை ஓய வைத்தார்கள். அக்ஷராப் யாஸக் கல்யாணமும் நடந்து முடிந்தது.

மறுதினம் காலையிலேயே என் தாயாரும் பாட்டியும் 'தேவா! இன்று சமத்தாக பள்ளிக்கூடம் போய் வர வேணும். இரண்டாவது நாள் போய் வரவில்லை என் ருல் படிப்பே வராது, தெரி யுமா?' என்று உதயராகம் பாடத் தொடங்கினர்கள். நான் எதிர் ராகம் பாடாமல் இருப்பேனு? நீலாம்பரி, முகாரி முதலிய ராகங்களை சப்தஸ்வரங்களிலும் போட் டு அலசிவிட்டேன். பிறகு இரண்டு அடி கிடைத்தது. பாட்டியே என்னை வலுக் கட்டாயமாக இழுத்துக் கொண்டு போய் வாத்தியார்

களிடம் ஏதேதோ பேசி நல்ல வார்த்தைகள் கூறி என்னை அமர்த்திவிட்டு வந்தார்கள்.

நான் பாட்டியின் பின்னுலேயே ஓடத் தொடங்கினேன். சட்டாம்பிள்ளை என்கிற பையன் என்னை இழுத்து மிரட்டி உட்கார வைத்தான். நான் அழுது அழுது தூங்கிவிட்டதுதான் எனக்குத் தெரியும். பள்ளிக்கூடம் கூட்டும் வேலைக்காரி திட்டியபடி இடுப்பில் கொண்டு வந்து பாட்டியிடம் விட்டுவிட்டுச் சென்றாள். அது முதல் ஒரு வருட காலம் திட்டு, குட்டு எத்தனையோ சிங்காரத்துடன் சில நாள் பள்ளிக்கூடம் போவேன். சிலநாள் போகாமல் மொண்டி செய்வேன். சில நாள் சகாக்களுடன் திருட்டுத்தனமாக விளையாடிவிட்டு பள்ளிக்கூடம் போனதாகச் சாதிப்பேன். ஏதாவது எழுத்து வந்ததா? என்று கேட்கிறீர்களா! ஹூஹூம் அதுதான் சைபர். இந்த லக்ஷணத்தில் பள்ளிக்கூடம் போகும் தினங்களில் என்னுடைய அபார புத்திசாலித்தனத்திற்கு பரிசாக என்னென்ன கிடைக்கும் தெரியுமா? 'கோதண்டம்' என்ற ஒரு தண்டனை உண்டு. அது இந்தக் காலத்தில் பார்ப்பதற்குக் கூடக் கிடைக்காது. அது என்னவென்றால் உயரத் தூலத்திலிருந்து தாம்புக்கயிறு தூக்குக்கயிறுபோல் தொங்கும்.

## வழி பிறந்தது



"தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். என் விஷயத்தில் அதற்கு முன்பே பிறந்துவிட்டது"

"என்ன? பெண்ணுக்குக் கல்யாணம், நிச்சயமாய் விட்டதா?"

"உம்...கல்யாணமே செய்யவேண்டாம் என்ற வழி பிறந்துவிட்டதய்யா."

அந்தத் நுனியில் இரண்டு கைகளையும் பிணைத்துக் கட்டிவிடுவார்கள். பூமிக்கும் என் காலுக்கும் சுமார் இரண்டு மூன்றடி உயரம் இடைவெளியிருக்கும். கையை விட்டால் கோவிந்தா! கடுமையான குற்றமாய் இருந்தால் தொங்கலாட்டத் திருவிழாவில் பூசை காப்பும் விழும். இந்தக் கோர தண்டனையைக்கூடச் சகிப்பேன். பிள்ளைகள் பார்த்துச் சிரிப்பதையோ! அடடா!

இவ்வளவுதான் என்று நினைக்கிறீர்களா? வெயிலில் நிற்பதும், பெஞ்சின் மீது நிற்பதும் எனக்கு சகஜமாகி விட்டது. முட்டிக்காலால் மண் தரையில் நடக்கச் சொல்வார்கள். கோதண்டத்திற்கு அடுத்தபடி எனலாம் அது. என்னைப் போலிருக்கும் மற்றொரு ப்ரகஸ்பதி பையனையும் சேர்த்து இருவரது கால்களையும் கைகளையும் இணைத்துக் கட்டி விடுவார்கள். இந்தக் காட்சியைப் பார்த்த மற்றப் பிள்ளைகள் 'ஹோ' வென்று கைக் கொட்டிச் சிரிக்கும்போது எங்கள் சொரூபத்தைப் பார்க்கவேண்டுமே! அடடா! அதை இப்போது நினைத்தாலும் ஒரு குலுக்குக் குலுக்குகிறது. இப்படி ஒன்றிரண்டு வருஷம் கழிந்தன.

நான் படிப்பில் சூன்யமாக இருந்தாலும், என்னிடம் வகுப்பு வாத்தியாரைத் தவிர மற்ற சில வாத்தியார்களுக்கும், தலைமை உபாத்தியாயருக்கும் தனி ப்ரீதி உண்டு. காரணம்? அது தான் ஒரு மர்ம ரகசியம். அக்கிரகாரத்தைத் தாண்டி ஒரு தெரு இருக்கிறது. அங்கு வசித்துவந்த ஒரு தேவதாசிக்கும் என் பள்ளி உபாத்தியாயர்களில் ஒருவருக்கும் நெருங்கிய சிநேகம் உண்டு. அநேகமாகக் காலையில் பள்ளிக்கூடத்தைத் திறப்பதற்கும், பிறகு பள்ளிக்கூடத்தைப் பூட்டி திறவு கோலை உபாத்தியாயரிடம் திருப்பிக்கொடுக்குமான உரிமை அவர் முறைகாலத்தில் எனக்குக் கிடைத்திருந்தது. சில சமயங்களில் பகல் விடுமுறையின் போது சாவியை வாங்கிதரவோ, மாலை திருப்பிக் கொடுக்கவோ நான் அந்த வீட்டிற்குப் போகும்படியான சந்தர்ப்பம் ஏற்படும். அதுவும் தவிர காய்கறி, பழம் புஷ்பம் முதலியவைகளையும் என்னிடம் கொடுத்தனுப்புவார். அப்போது நான் சிறியவனுகையால் எனக்கு விவரம் ஒன்றும் தெரியாது. உண்மையில் அந்த அம்மாள் ரொம்ப நல்லவள். சதிராடுவதிலும், பாடுவதிலும் மிகக் கெட்டிக்காரி. நான் அந்த வீட்டிற்குப் போகும் சமயம் அவள் பாடிக் கொண்டிருந்தால், நான் சென்ற வேலையையும் மறந்து நின்று கேட்டுக் கொண்டிருப்பேன்.

பாட்டுப் பாடுவதிலும் கேட்டு ரசிப்பதிலும் எனக்கு அலாதி ப்ரியம் உண்டு. நான் படிக்கிறேனே இல்லையோ, அவ்வுபாத்தியாயர் நடத்தும் பாடத்தில் எனக்குப் பாஸ் மார்க் கட்டாயம் கிடைத்துவிடும். இதைக் கண்டு பொறுமைப் படும் பிள்ளைகளும் இல்லாமவில்லை.

என் தகப்பனுரோ மகா விவேகி. ஹரிகதா காலக்ஷேபம் செய்யும் மேதாவி. சாஸ்திர சம்பிரதாய சத்விஷயங்களைக் கரைகண்டு படித்தவர். அடிக்கடி அவர் ஹரிகதைக்காக வெளியூர்போய் விடுவதால், என்னைப் பற்றி கோபிக்கவும் மாட்டார், கொஞ்சவும் மாட்டார். அவருடைய தாயாரும், எனது பாட்டியுமான பெரியவரே வீட்டுப் பொறுப்பை யெல்லாம் கவனித்துவந்தார். என் படிப்பைப் பற்றிய புகார் அவர்களிடம் சென்றவுடனே என்னை அழைத்து லேசாகக் கண்டித்து எச்சரிக்கை செய்து விட்டுவிட்டார்கள்.

இருப்பினும் என்னுடைய புத்தி படிப்பு என்ற எல்லைக் கெட்டாமல் போனலும், பாட்டு, பஜனை, விளையாட்டு இதில்தான் லயித்தது. எங்களூரில் அக்கிரகாரத்தை ஒட்டிச் சின்னஞ் சிறிய வெங்கிட ராமணஸ்வாமி கோவில் ஒன்று உண்டு. அங்கே அநேக உத்ஸவங்களும் நடக்கும். அடடா! நான் இதைச் சொல்ல மறந்துவிட்டேனே. அந்தக் கோயிலுக்கு நான் தினந்தோறும் போவேனே இல்லையோ, பள்ளிக்கூடம் போவதாக வீட்டில் சொல்லிவிட்டு, அக்கோயில் ப்ராகாரத்தில் உள்ள ஒரு மறைவான இடத்தில் என் பலகை புத்தகத்தை தபஸ்செய்ய அமர்த்திவிடுவேன். சில தினங்களில் வீட்டிற்கு வரும்போது கொண்டுவரக்கூட மறந்து விடுவேன். அக் கோயிலுக்குப் பின்னல் சிறிய தோப்பு உண்டு. அதுதான் பல்சப்ளாம், குடுகுடு, கோவிகில்லி, தூக்கம், பாட்டு எல்லாம் நடைபெறும் முக்கிய ஸ்தலமாக அமைந்தது. அந்த ஊரில் அங்கப்பன் என்றொரு மேளக்காரன் இருந்தான். அவன் ப்ரதி தினமும் காலையும் மாலையும் தன் வீட்டுத் திண்ணையிலேயே அமர்ந்து சாதகம் செய்வான். அந்த இடத்தில் ஆணி அடித்தாற் போல் நான் உட்கார்ந்து அவன் வாசிப்பதை யெல்லாம் ராகமாக இழுப்பேன். அங்கப்பன் என் பாட்டைக் கேட்டு சந்தோஷித்து "தேவு!....நீ நல்லா பாடறியே. யாராச்சும் வாத்தியார்கிட்டே நல்லாச் சொல்லிக்கக் கூடாது? தாஸர் கதைக்கு நீயே பின் பாட்டு பாடலாமே!" என்று சொல்லுவான். அவ்வளவு தான். எனக்கு உச்சி

குளிர்ந்து விடும். "நீயே என் அப்பாவிடம் சொல்லேன்" என்று வேண்டிக் கொள்வேன். அவன் உண்மையில் நல்ல மனிதன். எனக்குச் சிறியதாக இரண்டு கீர்த்தனைகள் சொல்லிக் கொடுத்தான்.

மற்றொரு தேவதாசியின் தம்பி, டவுல் ராமு என்பவர். அவர் நன்ருக வாசிக்கக் கூடிய ஞானஸ்தர். நான் பாடுவதைக் கேட்டுவிட்டு, "தேவு! நீ படிச்சுப் பாழாப்போனே. பாட்டனுச் சொல்லிக்கோ, நல்ல வித்துவானு வருவே. நானே தாஸர் கிட்டே சொல்லி ஏற்பாடு செய்யறேன். ஏன்வா தேவு! நானே கற்றுக் கொடுக்கிறேன்" என்று என் கையை பிடித்திழுத்தான். பாட்டு கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் அலைபோல் எழுந்தாலும், படிக்காமல் திரியும் நான் பாட்டில் இறங்கினல் வீட்டில் என்ன கிடைக்குமோ என்ற நடுக்கமும் கூடவே எழுந்தது. இருந்தாலும், சங்கீதத்தின் ஆசையினல் அவனேடு ஓடினேன். என்ன ஆச்சரியம்! நான் தெருக்கோடி திரும்பும் போது என் பாட்டியும் என் தங்கை பத்ரகாளியும் கடையிலிருந்து சாமான்களுடன் வருவதைக் கண்டு, ராமுவின் பின்னல் ஒட்டி ஒளிந்து கொண்டேன்.

(தொடரும்)



குருவிக்காரி:—எங்கொயந்தெ!...இந்த வூட்டே காலேலேதான் கல்யாணம். ஆச்சுது. ராவுக்கு இலை கிலை ஆப்புடுமா...?

பையன் :— காலையில் கல்யாணமானல் என்ன....காலையோடு அது முடிந்தது. இப்போ சினிமாவுக்குப் போயிருக்காங்க....ராவுக்கு இலை கிடையாது. ஹோட்டல்லே டின்னர்.

# கிழக்கு வெளுத்தது




## 1

### அன்புக்குப் பஞ்சம்—ஆசைக்குத் தஞ்சம்

உலகமே தன்னையும் தன் கடமைகளையும் மறந்து ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்திருக்கிறது. ஆனால் இந்த அத்புதமான ஆழங்காண முடியாத கருங்கடல் மட்டும் எந்த நிமிடமும் சதா சர்வதா தனது கடமையை மறக்காமல் சுருள் சுருளாக அலைகளை அள்ளி வீசி அதன் மூலம் உலகத்திற்குப் பல அரிய விஷயங்களை விளக்கிக் காட்டிக் கொண்டே இருக்கிறதே. இதென்ன ஆச்சரியம்! என்று பாஸ்கரன் தன்னை மறந்த நிலைமையில் மொட்டைமாடியில் நின்று கருங்கடலை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

காலைக்கதிரவன் கருங்கடலைக் கிழித்துக்கொண்டு வெளி வரும் அழகு ஒருபுறம் வசீகரிக்க, சிலு சிலுப்பான காற்று ஒருபுறம் புதிய தெம்பையும் சுறுசுறுப்பையுங் கொடுத்து ஊக்கிவிட, கடலின் ஓயாஉழைப்பின் அதிசயம் இதயத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து, வைத்த விழி வாங்காமல் நிற்கச் செய்த அந்த மோன நிலையை ஒரு சைகிள் மணி கணகணவென்று சப்தம் செய்து கலைத்த பிறகுதான் பாஸ்கரன் சடக்கென்று வீதிபுறத்தை உற்று கவனித்தான்.

‘அடடே! சேகர் வரும் நேரமாகி விட்டதா!’ என்று தனக்குள் சொல்லியவாறு மேலே வரும்படி சைகை செய்

தான். அடுத்த க்ஷணமே சேகர் மேலே வந்து, "என்னடா! இன்னும் நீ தயாராகவில்லையா? கடற்கரைக்குப் பக்கத்தில் இருக்கும் பெருமையில் உன்னையே மறந்து தன்மயமாகி மோனநிலையில் சமாதியாகிவிட்டாயே! என்னப்பா அத்தனை ஸ்வாரஸ்யமான காக்ஷியைக் காண்கிருய்!" என்று கேட்டபடி தட்டிக் கொடுத்தான்.

உண்மையில் தன்னை மறந்த நிலையில் நின்றிருந்த பாஸ்கரனுக்குச் சரியான தெளிவு உண்டாவதற்குச் சில விளடிகள் சென்றது என்றால் மிகையாகாது. மெல்ல சமாளித்துக்கொண்டு அவனுக்குள்ள இயற்கையான புன்முறுவலுடன் "அப்பனே! மகானுபாவா! உன் வாய்ச் சொல் பலிக்காமலிருக்க வேண்டும். நான் இந்த உலகத்தில் இன்னும் எத்தனையோ காலங்கள் பிழைத்திருந்து என் மனக் கடலில் அலைஅலையாகப் பொங்கி எழும் லக்ஷியங்களை எல்லாம் ப்ரத்யக்ஷமாக நினைவில் கண்டு களிக்க ஆசைப்படுகிறேன். என் வாழ்நாள் வீண் நாளாகப் போய் விட நான் கனவிலும் விரும்பவில்லை. சமாதி நிலையும் வேண்டாம், மோன நிலையும் வேண்டாம்" என்று கூறி முடிக்கும் முன் சேகர் ஒருவிதமான ஏளனச் சிரிப்புச் சிரித்து விட்டு, குறும்புப் பார்வை பார்த்தபடியே "அடடா! கேட்பதற்குக் கதை போலிருக்கிறதப்பா! எங்கே உன்னுடைய லக்ஷியத்தை—எதிர் பார்ப்பை—சாதனையை இன்னும் கொஞ்சம் சொல்லு பார்க்கலாம்" என்று குறுக்கிட்டுப் பேச்சை மடக்கினுன்.

பாஸ்கரனுக்கு இவனுடைய பேச்சும் செய்கையும் அருவருப்பைத்தான் கொடுத்தன. ஆகையால், குரலைக் கனைத்துக் கொண்டு, "சரி! நான் கதைகளை நினைத்த மாத்திரத்தில் சொல்வதற்குக் கற்பனைக் களஞ்சியமான எழுத்தாளனல்ல என்பது நினைவிருக்கட்டும்" என்று முடிப்பதற்குள், "ஐயோ! முட்டாள்தனமாகப் பேசிவிட்டேன் மிஸ்டர் பாஸ்கரன் ஐ.ஏ.எஸ். அவர்களே! கோபிக்காதீர்கள். நீங்கள் கருங்கடலுடன் அளவளாவிக் கொண்டிருக்கையில் நான் நடுவே ஒரு கட்டைமரம்போல் வந்து சேர்ந்துவிட்டது குற்றந்தான். மன்னிக்கவேணும் ஸார்" என்று விளையாட்டாகச் சொல்லியபடியே கையைக் கூப்பி நமஸ்கரித்தான்.

பாஸ்கரனும் இலேசுப்பட்டப் பேர்வழியல்ல என்பதை நிலைநாட்டும் முறையில் "தீர்காயுஷ்மான்பவ" என்று இரண்டு கைகளையும் நீட்டி தலைக்கு நேர் பிடித்து ஆசீர்வதித்தான். பெரிய சங்கீதக் கச்சேரிகளில் ம்ருதங்கக் காரருக்கு சந்தர்ப்பம் கொடுத்த உடனே அவருடைய

ஆவர்தனங்கள் கச்சிதமாக முடிந்ததும் ஏக காலத்தில் பாடகரும் பிடில் வித்வானும் சேர்ந்து பாடியும் வாசித்தும் முடிக்கும்போது சபையிலேயே ஒரு பரபரப்புண்டாகி அதன் மூலம் எழுந்த உணர்ச்சி கரகோஷமாக மாறிப் பெரிய சப்த அலைகளைக் கிளப்பிவிடும். அதுபோல் இந்த இரு வாலிபர்களின் செய்கையின் உணர்ச்சி வேகமும் சிரிப்பொலியாக மாறி ஒரு முடிவைக் கொடுத்தது.

உடனே சேகரே பேசத் தொடங்கி, "டேய்! பழி... மணியைப் பாருடா! முகூர்த்தங்கூட முடிந்துவிடும் போலிருக்கிறதே! நாம் சாப்பாட்டு ராமன்களாய் விருந்துக்குப் போனல் மிகமிக அழகாயிருக்கும், கிளம்புடா!" என்று சினத்தின் கம்பீரம் ஜ்வலிக்க அதிகாரத்துடன் கூறினன்.

அடுத்த நிமிடமே இரு நண்பர்களும் சைகிள் மணிகளை பலமாக சப்தம் செய்த வண்ணம் கிளம்பினர்கள். பாஸ்கரனின் உயர்தரப் படிப்புக்காக அவன் சென்னையில் தனி வாசம் செய்யத் தொடங்கினன் எனினும் அவன் ஒரு நிமிடங்கூட தனிமையில் இருந்ததே இல்லை. அசல் பட்டிக்காடுமின்றி பெரிய பட்டிணமுமின்றி நடுத்தரமாக உள்ள பவளமலை என்கிற ஊரே அவனுடைய சொந்த ஊராகும். அங்கு தலைமுறை தத்துவமாய் அவன் முன்னேர்கள் மிகமிக சீரும் சிறப்பும், கண்ணியமும் பெற்று 'பஞ்சநதம் குடும்பத்தினர்' என்ருல் சுற்று வட்டாரங்களிலும் வெகு தூரத்திற்கப்பாலும் தெரிந்து கொள்ளும் அபார நிலையைப் பெற்ற குடும்பமாக விளங்குகிறது.

பாஸ்கரனின் பிதா ஒரு சாதாரண பள்ளிக்கூட உபாத்தியாயர். அவருடைய மூத்த மகன் சேஷகிரியும் அதிகப் படிப்பின்றி பத்தாவது வகுப்புடன் முடித்துவிட்டதால் ஏதோ ஒரு ஆபீஸில் சிறிய க்ளார்க்கு வேலை பார்த்து வருகிருன். பாஸ்கரனுக்கு மட்டும் தான் வெகு உயர்ந்த படிப்பு படித்துவிட்டுத் தன் குடும்பத்திலேயே இதுவரையில் கண்டிராத கீர்த்தியை நிலைநாட்டிப் பெருமையடைய வேண்டும் என்கிற ஆசை சிறு பிராயம் முதலே வளர்ந்து வந்ததால் சகல பலமும், சூழ்நிலையும் அதற்குப் பரிபூர்ண ஒத்தாசை செய்து அவன் கனவை ஒருவாறு நினைவாக்கி விட்டது. ஐ.ஏ.எஸ். பரீக்ஷையில் தேறிய உடனே அவனுக்கு அதற்குத் தகுந்தபடி பெரிய உத்தியோகம் வெளியூரில் கிடைத்து விட்டது. அதுவும் ஒரு அதிர்ஷ்டந்தான் என்று ஊரே கொண்டாடியது. அவன் ஐ. ஏ. எஸ். பரீக்ஷைக்குப் படிக்கும் முன்பே அவனது பெற்றேர்கள் கல்யாண வேட்டையாடத் தொடங்கிக் கடிதபாணங்களை பாஸ்

கரன்மீது தொடுத்துக்கொண்டே இருப்பினும் பாஸ்கரன் அதற்குச் சற்றும் இடமே கொடுக்காமல் தனக்கு பரிக்ஷை யில் தேறி நிரந்தரமான வேலை கிடைத்த பிறகுதான் கல்யாணப் பேச்சிற்குப் பதிலளிப்பேன் என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டதோடு அவன் பெற்றோர்களிடம் லீவுக்கு அடிக்கடி செல்வதையும் நிறுத்திக் கொண்டான்.

காரணம்? ஊருக்குச் சென்றால் கல்யாணப்புராணத்தைத் தவிர வேறு விஷயமே இல்லாததால் அவனுக்கு வெறுப்பு உண்டாகி விட்டது. அதனால் தனக்கு அங்கு வருவதற்கு இஷ்டமில்லை என்பதை மறைத்து லீவே கிடைப்பதில்லை, ஞாயிற்றுக்கிழமைகளில்கூட ஆபீஸ் உண்டு என்று ஒரே சாக்கு சொல்லி அவர்களை நம்ப வைத்து விட்டான்.

அவன் காலேஜியில் படித்த காலத்தில் அவனிடம் உயிராக இருந்த பிரின்ஸ்பால் ராமநாதனின் மகளுக்குத் தான் இன்று கல்யாணம் நடக்கிறது. அவர் ப்ரத்யேகமாய் அழைத்து விட்டுச் சென்றதால் கட்டாயம் போய்த் தீர வேண்டிய கடமை ஏற்பட்டு விட்டதால் அதிகாலையில் புறப்பட்டான். சிநேகிதனுடன் சைகிளில் செல்லும் போது, ப்ரின்ஸ்பால் ஆதியில் சொல்லி வந்த விஷயங்கள் பூராவும் அவன் மனக் கடலில் அலை அலையாகச் சுருண்டு ஓடி ஒடிந்த வண்ணமாக இருந்தன. அவைகளில் தன் மகள் சாந்தாவையே இவனுக்கு மணம் செய்விக்க எண்ணிப் பேசியதும் ஒன்றாகும்.

ஆனால் அது விஷயத்தில் பாஸ்கரனுக்குப் பரிபூர்ணமாக பிடிக்கவில்லை என்பதனால் தற்சமயம் அதைப்பற்றிக் கவலையே கொள்ளவில்லை. அவன் மனம் விரும்பாததற்கு காரணம் சாந்தாவைத் தன் சொந்த சகோதரியைப் போலவே பாவித்து விட்டதால் விவாகம் என்ற நினைப்பிற்கே அவன் சிந்தையில் இடம் பெறவில்லை என்பதை வெளிப்படையாக தன் ஆசிரியரிடம் தெரிவித்துவிட்டதால் இது பற்றிய எத்தகைய மனஸ்தாபமும் இன்றி சமாதானமே நிலவியது.

ப்ரம்மாண்டமான மணப்பந்தலின் அழகும், பாண்டு மேளத்தின் இன்னிசையும் ஒன்றுகூடி இவர்களை வரவேற்று மரியாதை செய்வதுபோன்ற ஒரு புத்துணர்ச்சியும் தோற்றமும் உண்டாகியது. இவர்கள் சைகிளை விட்டு இறங்கி உள்ளே செல்லும்போது கெட்டிமேளம் கணகணவென்று கொட்டவும் பெண்டுகள் லக்ஷ்மி கல்யாணம் கவுரி கல்யாணம் பாடவும் மாங்கல்ய தாரணமாகி புஷ்ப

மாரியும் அக்ஷதைத்தையும் பொழியவும் ஏக காலத்தில் நடந்த தால் எல்லோருடைய இதயங்களிலும் ஆநந்தம் ஊற்றெடுத்தது போன்ற உணர்ச்சி உண்டாகியது.

மணமக்களின் ஜோடி தடபுடலாகவே இருந்ததால் அதைப்பற்றி வர்ணித்து சிலர் பேசினர்கள். பாஸ்கர னுக்கு அங்கு யாரையுமே தெரியாதாகையால் ஜனத்திர ளின் மத்தியில் தானும் வந்து அமர்த்தான். இவன் அரு கிலிருந்த சிலர் "என்னமோ ப்ரமாதமான இடம் என்று மலைத்துப்போனர்கள். நான் எத்தகைய முதல்தரமான பெண்ணைப்பற்றி சொன்னேன் தெரியுமா? லக்ஷ ரூபாய் சொத்துடன் மகாலக்ஷ்மியைப் போன்ற அழகும் அறிவும் சொட்டச் சொட்ட பெண்ணும் அபாரமாய் கிடைத்திருக் கும். அவர்களுக்கு அதிர்ஷ்டம் வேண்டாமா ஸார். ஏதோ ப்ரின்ஸ்பாலின் மகள். பி. ஏ. பாஸ் செய்துவிட்டாள் என் கிற பெருமையைத் தவிர வேறு ஒன்றையும் காணவில்லை. இதென்ன கல்யாணம் ஸார்" என்றூர்கள். இன்னொரு கோஷ்டி அதையொட்டித் தாளம்போட்டே பேசியதைக் கேட்ட பாஸ்கரனின் மனது வியப்பால் வெடித்தது. இப் படியா நம் நாட்டின் மக்கள் வாழ்கிறூர்கள், என்று நினைத்து நிலைத்துப் பதுமைபோல் உட்கார்ந்திருந்தான்.

ஆனல் பிள்ளையின் தாய் தந்தையர் யார் என்று இவ னுக்குத் தெரியாது. எனினும் ஒரு பெரியவர் இத்தனை ஆராவரத்திற்கு மத்தியிலும் முகத்தில் சந்தோஷக் குறிப்பு என்பது மறைந்து கண்களை அடிக்கடி துடைத்துக் கொண் டிருப்பதைக் கண்டு அவர் யார் என்று புரியாமல் சிறிது விழித்தான். தன் பக்கத்திலுள்ளவர்களிடம் அவர் யார் என்றுகேட்டும் தெரிந்துகொண்டுவிட அவன் மனது பாய்ந் ததால் "ஸார், ஏன் அந்த பெரியவர் அடிக்கடி கண்களைத் துடைக்கிறூர்" என்று கேட்டே வைத்தான்.

அதற்கு அந்த விமர்சன கர்த்தா ஏளனமான பார்வை யுடன் அலக்ஷியமான த்வனியில் "அவரா! அவர்தான் கல் யாணப் பிள்ளையின் தகப்பனர். என்னுடைய அத்தான் பயித்தியக்கார மனுஷ்யன். பெரிய பந்தலில் அழுகிறுன் வெட்கமில்லாமல். மூத்த மருமகள் வெகு கெட்டிக்காரியாய் அழகாய் இருந்தாள். சில மாதங்களுக்கு முன்பு அவள் திடீ ரென்று தவறிவிட்டாள். பகவான் செயலுக்கு யார் என்ன செய்ய முடியும் ஸார். அந்த நாட்டுப்பெண்ணின் மறைவை எண்ணி அசடு அழுகிறது. இவரே தேவலை. இவர் மனை வியோ ஒப்பாரி வைத்துஅழுகிறுள். இன்று பந்தலில் அந்த மனுஷியைக் காணவேயில்லை. இனிமேல்தான் போய்

விசாரிக்க வேண்டும். மூத்த மகனுக்கு மறு விவாகத்தைச் செய்துவைக்க எத்தனை ப்ரயத்தனப்பட்டும் அவன் இணங்கவில்லை. இந்த பையனுக்கு வெகு தூரத்தில் வேலையாகிவிட்டதால் கல்யாணத்தைச் செய்து மனைவியுடன் அனுப்பிவைக்க வேண்டுமென்பதால் இந்த கல்யாணத்தை அவசர அவசரமாகச் செய்து முடிக்கிறார்கள்." என்று மூச்சு விடாமல் கடகடவென்று மிஷன்போல் ஒரு க்ஷணத்தில் பிள்ளைவீட்டுக் குடும்ப விஷயங்களைக் கொட்டியளந்து விட்டார்.

பாஸ்கரனின் மனதில் மற்ற எதுவுமே படவில்லை. மூத்த மருமகள் இறந்த மறுதினமே அதை மறந்துவிட்டு மறு விவாகத்திற்குப் படை எடுக்கும் சமுதாயத்தில் மருமகளுக்குக் கண்ணீர்விடும் மாமனார் மாமியார்கூட இருக்கிறார்களா இந்த உலகத்தில்? என்கிற ஆச்சரியந்தான் அவனை முற்றுகை இட்டதுடன் எங்கெங்கோ சிந்தனைச் சுழலில் சுழற்றித் தவிக்கச் செய்தது.

இந்த உணர்ச்சியினால் கல்யாணவீட்டு வரவேற்பும் சாப்பாடும்கூட அவன் மனதை கவரவில்லை. தனது பிரின்ஸ்பாலிடம் சொல்லிகொண்டு தான் கொண்டுவந்த பரிசை சாந்தாவிடம் கொடுத்து வாழ்த்திவிட்டு வீடு திரும்பினான். போகும்போது இருந்த உத்ஸாகம் குன்றி இப்போது காயும் வெப்பத்துடன் கலந்தது மூத்த மருமகள் இறந்ததற்கு இத்தனை வருத்தத்துடன் காணும் மனிதர்களைப் பார்க்கும்போது என் தாயாரின் நினைவை என்னால் மறக்க முடியவில்லையே! என் அண்ணனின் மனைவியை என் தாய் செய்யும் கொடுமையில் அவள் இறந்துவிடக் கூடாதா என்றுகூட அம்மா நினைத்துவிடுவாளோ என்றல்லவா மனம் துடிக்கிறது. என்ன உலகம். என்ன மனித சமுதாயம். என்று தனக்குள் எண்ணிக் குழம்பிய சமயம் ......'சார்! தபால்' என்று கூறியபடி கனமான ஒரு கவரை மேஜைமீது வைத்தான். இந்த உலகத்தையே மறந்த நிலையில் சிந்தனைகள் சிதறுண்டு பழைய எண்ண அலைகளில் புரண்டுகொண்டிருந்த பாஸ்கரனுக்கு மேல்குறித்த ஓசை காதில் விழுந்ததும் திடுக்கிட்டு "....ஓ! தபாலா! தாங்ஸ்" என்று எந்திரம்போல் ஏதோ சொல்லியபடியே தபால்காரனைப் பார்த்தவாறு கடிதத்தை எடுத்தான். தபால்காரனும் சிரித்தபடியே: "ஸார்! கவர்மிகவும் கனமாயிருப்பதால் விஷயமும் மிகமிக கனமாகவே இருக்கும் அல்லவா! ஏதோ! கல்யாணம் நிச்சயமானால் இந்தக்கிழவனை மறக்கக்கூடாது" என்று வழக்கமான பல்லவியைப் பாடிவிட்டு நின்றான்.

சில தபால்காரர்கள் மணியார்டர் கொடுத்தால் அதற்கு ஏதோ கட்டளை இருப்பதுபோல் சில்லரை வாங்காமல் போவதில்லை. பின்னும் சிலரோ யாருக்கு என்ன தபால் வருகிறது. விஷயம் யாதாக இருக்கும் என்கிற ஒரு குறிப்பை அறிந்து கொண்டு பல்லை இளிப்பதும், கும்பிடு போடுவதும், தனக்குச் சம்மந்தமில்லாத விஷயமாயினும் எதையோ சொல்லி வைத்துவிட்டுத் தயங்கி நின்று கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு போவதும் வழக்கம்.

தன் சரீரம் கஷ்டப்படாமல் உண்டு உலாவி, உறங்கி உல்லாஸமாக மனம்போன போக்கில் செலவுசெய்து அதன் வருத்தம் தெரியாமல் காலம் தள்ளும் சில காலேஜ் படிக்கும் மாணவர்களின் மைனர் வாழ்க்கையில் இம்மாதிரி பணங் கொடுத்துத் தமக்கு நல்ல பெயர் தேடிக் கொள்வது வெகு சகஜம். தாங்கள் பெரியவர்களாகி தம் மக்களை இம்மாதிரி மைனர் வாழ்வு வாழ அனுப்பும்போதல்லவா இவர்களுக்கு அந்த வருத்தம் தெரியப் போகிறது. அந்த முறையில் படிக்கும் சில மாணவர்களின் ஜாபிதாவில் சேராத ப்ரக்ருதியேயாவான் பாஸ்கரன்.

தபால்காரன் தயங்கி நின்றதைக் கண்டதும் வெறிக்க ஒரு சிரிப்புச்சிரித்துவிட்டு, "இந்தாப்பா! தாம்பூலம் மென்று கொண்டே போ!" என்று கூறியபடியே தான் கல்யாண வீட்டிலிருந்து கொண்டு வந்த தாம்பூலத்தை எடுத்துக் கொடுத்தான். தபால்காரன் தலை குனிந்தபடி..."உம்... வீடு வீடாக ஏறி இறங்கும் உத்தியோகத்தில் தாம்பூலம் மெல்வதற்கு நேரமேது ஸார்! இருக்கட்டும் இங்கேயே!" என்று கூறிச் சென்றுவிட்டான். கவரைக் கையிலெடுத்து பார்த்த பாஸ்கரன்...அடேயப்பா! ஒரு அணு கொடுத்து வாங்கும் தினசரி பத்ரிகையில் வரும் விஷயங்களைவிட அதிகமாக இருக்கும்போல் தோன்றுகிறதே! இந்த மாதிரி ஒரு பயித்தியம் அம்மாவுக்கு என்றுதான் விட்டு ஒழியுமோ தெரியவில்லை என்று நினைத்தபடி கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

சிரஞ்சீவி பாஸ்கரனுக்கு ஆசீர்வாதங்கள்,

உபயக்ஷேமம்

உன்னிடமிருந்து கடிதத்தை ஒருவாரமாக எதிர்பார்த்து சலித்து விட்டது. என்றாலும் பெற்ற மனம் கேட்கவில்லை. 'எனக்கு பெரிய வேலை கிடைத்துவிட்டது. மாற்றலாகிப் போகப் போகிறேன். அச்சமயம் நான்கு நாட்கள் ஊருக்கு வந்து எல்லோரிடமும் இருந்து விட்டுப்போகிறேன்' என்று மட்டும் எழுதியிருக்கிறாயே

யன்றி நான் கேட்டிருந்த முக்யமான கேள்விக்கு ஏன் பதில் போடவில்லை. அதற்குக்கூட உனக்கு மனமில்லையா? ஒய்வு இல்லையா! நீ இக் கடிதத்திற்கும் பதில் போடவில்லை என்றால் உன் அண்ணனை அழைத்துக் கொண்டு நான் திடுதிடுவென்று அங்கு வந்து விடுவேன். வரும்போது சும்மாவா வருவேன்? எந்த வரனைப்பற்றி உனக்குத் திரும்பத்திரும்ப எழுதினேனோ அவர்களையும் உடனழைத்துக் கொண்டு உன் விருந்தாளியாகவே வந்து விடுவேன் ஜாக்ரதை. இந்தக் கவரில் பெண்ணின் புகைப் படத்தை வைத்திருக்கிறேன். அதை உன் கண்களை நன்றாக விழித்து மனக் திருப்தியுடன் பார்த்த பிறகாவது உடனே ஓடி வந்து சேரு. பெண்ணோ பெரிய பட்டதாரி எம்.ஏ. சொத்தோ கணக்கே இல்லை. அவர்களுக்கு இந்த ஒரே ஒரு பெண் தானாகையால் சகல சாம்ராஜ்யத்திற்கும் நீயே ராஜா. அவளே ராணி. நீ இப்போது ஐ.ஏ.எஸ். பாஸ் செய்திருக்கிறாயே! அதைப் போலவே அந்தப் பெண்ணும் படிக்கிறாளாம். அவளுடைய பிதா இத்தகைய பரீக்ஷைக்குப் படிக்க அந்த காலத்திலேயே சீமைக்குச் சென்று படித்து பாஸ் செய்துவிட்டு வந்தவராம். இத்தனை பெரிய மதிப்பும் கண்ணியமும் பொருந்திய சம்மந்தம் வலுவில் தானாக வந்திருக்கையில் உனக்கு பதில் எழுதக் கூடத் தோன்றவில்லையா! நானும் இம்மாதிரியான சீரும் சிறப்போடும் வரும் நாட்டுப் பெண்ணை வைத்து வாழ பெரிய ஆவல் கொண்டு துடி துடிக்கிறேன். சம்மந்திகளிடம் பெருமையாகப் பரிமாற மனம் பரக்கிறது. ஏதோ நான் செய்த மகா பாவத்தினால் உன் அண்ணன் விஷயத்தில் சகலமும் படுதோல்வியும், ஏமாற்றமும், ஏன் வயிற்றெரிச்சலாகவுமே முடிந்து விட்டது. உன் அண்ணன் படிக்காத நிலையும் நான் அப்போது உலகத்து நிலை தெரியாத அப்பாவியாயிருந்த நிலையும் ஒன்று சேர்ந்து ஏதோ ஒரு தரித்திர மூதேவியைக் கொண்டுவந்து காலில் விலங்குபோல் மாட்டியாகி விட்டது. அதனால் என்னிதயம் எப்படித் துடிக்கிறது என்பது பகவானுக்குதான் அர்ப்பணம். என் வயிற்றில் பிறந்த நீயாவது பெற்ற தாயின் பாசமறிந்து என் மனக் குறையைத் தீர்த்து வைத்து என்னை மகிழ்ச்சி மயமாக்கி விடுவாய் என்று நம்பியே நான் இத்தனை தூரம் உன்னை உயர்ந்த முறையில் படிக்க வைத்து இத்தனைப் புகழும் பதவியும் அடையச் செய்திருக்கிறேனே! இதையாவது நினைத்துப் பார்த்து உன் பெற்ற தாயின் மனத்தைக் களிக்கச் செய்யவேண்டாமா? நீ இனியும் தாமதம் செய்யாதே. கடிதம் பார்த்த உடனே இன்றே ஒரு தந்தி கொடுத்து விடு.

நான் நாளைய தினமே ஸ்டேஷனுக்கு வருகிறேன். அந்தப் பெண்ணின் பிதாவை வேறு ஊருக்கு மாற்றி விடப் போவதாக ஒரு வதந்தி உலாவுகிறது. அப்படி மாற்றலாகிப் போவதற்குள் அவர்கள் கல்யாணத்தை முடித்து விட்டுப் போகவேண்டும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். ஜாதகப் பொறுத்தமோ சொல்ல முடியாது. அத்தனை விசேஷமாக அமைந்திருக்கிறது. மற்றவைகளைத்தான் நூறு தரம் எழுதிவிட்டேன். இன்று நீ புறப்பட்டு வரவில்லை என்றால் நாளை இரவு வண்டிக்கு நாங்கள் கிளம்பி விடுவோம். இது நிச்சயம். உடனே வந்து சேரு. நாளைய தினமே நல்ல நாளாகவும் இருப்பதால் பெண்ணைப் பார்க்கவும் ஏற்பாடு செய்து விடலாம். இங்கு எல்லோரும் சுகம்.

உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்
உன் தாயார் அகிலாண்டம்மாள்.

இத்தனை பெரிய கடிதத்தை ஒருவாறு சலிப்பும் பெருமூச்சும் துரத்தியபடியே படித்து முடித்தான். புகைப்படத்தைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணங்கூட அவனுக்குத் தோன்றாததால் கட்டிலில் சாய்ந்தான். தான் இந்த நெருக்கடியான நிலையில் என்ன செய்யலாம். நாளைய தினம் அவர்களையும் இழுத்துக்கொண்டு அம்மா வந்துவிடப் போகிறாள், என்கிற குழப்பமும், அருவருப்பும் வேறு பாதிக்கின்றன. அவனுடைய நிலைமை பெரிய சோதனைச் சுழலில் சுழல்வது போன்றிருந்தது. சற்றுநேரம் படுத்து கிடந்தான்.

அடுத்த தபால் வரும் நேரமும் ஆகிவிட்டதை அந்தத் தபால்காரனின் குரலால் அறிந்து அக்கடிதத்தை வாங்கினான். அது உத்யோகத் தோரணையில் ஆபீஸிலிருந்து வந்த கடிதம் என்பதைப் பார்க்கும்போதே தெரிந்ததால் வெகு வெகு ஆவலுடன் பிரித்துப் படித்தான். அடுத்த வாரமே வேலையில் வந்து சேரவேண்டும், என்கிற தகவல் கிடைத்ததும் வெகு குஷியுடன் ஒரு துள்ளு துள்ளியவாறு எழுந்தான்.

## 2.

## தாயின் தாண்டவம்—தகர்த்திடும் மர்மம்

**கா**லைக் கதிரவன் வெகு உத்ஸாகத்துடன் கீழ்திசையில் தோன்றி உலகையே ஜோதி மயமாக்கியதோடு மக்களுக்கு அபாரமான சுறுசுறுப்பையும் வேலையில் பரபரப்

யையும்கொடுத்தது. பவளமலை பெரிய பட்டிணமும் அல்ல. பட்டிக்காடுமல்லவாகையால் நாகரீகமும்பழமையும் ஒன்றுக் கொன்று கைகோர்த்து ஒத்துமையாக வாழ்வதே போல், மோட்டார் வண்டி, மோட்டார் சைகிள், கட்டை வண்டி, இரட்டை மாட்டுவண்டி, முதலியவைகள் வீதியில் சகஜமாகப் போய்க் கொண்டிருந்தன.

காலை எட்டு மணி சுமாருக்கு ஒரு ஜட்கா வண்டி அகிலாண்டம்மாளின் வீட்டு வாசலில் வந்து நின்றது. அன்றய தினம் கடிதத்தையோ! தந்தியையோ அகிலாண்டம்மாள் எதிர்பார்த்திருந்தாளேயன்றி மகனின் வரவை எதிர்பார்க்வில்லையாதலால் அந்தம்மாள் காலையில் நீராடிவிட்டுக் கோயிலுக்குச் சென்றிருந்தாள். பாஸ்கரன் தன் பெட்டி, படுக்கை, கூஜா, முதலியவைகளைத் தானே கொண்டுவந்து கூடத்தில் வைத்தபோதுதான் தற்செயலாக அங்கு வந்த அவனுடைய அண்ணனின் மனைவி பார்த்தாள். உத்ஸாகத்தின் உணர்ச்சி மின்ஸாரம்போல் தாக்கி ஒரு துள்ளு துள்ளச் செய்தது. அவளையறியாமல் வந்த புன்னகையை அடக்கமாட்டாது உள்ளே ஓடிச்சென்று பூஜை செய்து கொண்டிருந்த தன் கணவனிடம், "உங்கள் தம்பீ வந்துவிட்டார். அம்மா கோயிலுக்கு போயிருக்கிறார்களே!....'' என்று பகவான் படத்தைத் தான் பார்த்துக்கொண்டு சொல்லி விட்டு அடுக்களைக்குள் புகுந்தாள்.

பாதி பூஜையில் அப்படியே விட்டுவிட்டு மகத்தான சந்தோஷத்துடன் "வாப்பா! அம்பீ! வா!வா! சவுக்கியந்தானே உன் ப்ரின்ஸ்பால் மகளுடைய கல்யாணக் கடிதம் இங்கு அப்பாவுக்குக்கூட வந்தது. நீ போயிருந்தாயா? அப்பா மார்க்கட்டிற்குப் போயிருக்கிறார். இதோ வந்துவிடுவார் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு வா!" என்றான்.

பாஸ்கரன் அண்ணனை சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து விட்டுப் பின்கூடத்திலிருந்த ஊஞ்சல் பலகையில் அமர்ந்தவாறு "அண்ணா! நீ கையில் கற்பூரத் தட்டுடன் வந்திருப்பதைப் பார்த்தால் பூஜையை அரைகுறையாக விட்டுவிட்டாய் போலிருக்கிறதே, போய் அதை முடித்துவிட்டுவா." என்று சிரித்தபடியே சொன்னான்.

இதற்குள் பூமா ஒரு சிறியதட்டில் காலையில்செய்த ரொட்டியும் காப்பியும் எடுத்துவந்து ஒரு சிறிய முக்காலியை எடுத்துப்போட்டு அதன்மீது வெகு மரியாதையுடன் வைத்துவிட்டு க்ஷணநேரத்தில் திரும்புவதற்குள் கோயிலிலிருந்து வந்த அகிலாண்டம்மாள் தன் சிறிய மகனின் வருகையைக்

கண்டு பூரிப்பும் அவனுக்கு மூத்த மருமகள் காப்பி பலகாரம் கொண்டுவைக்கும் பரிவைக்கண்டு தாங்கமுடியாத எரிச்சலும் உண்டாகி ஏககாலத்தில் இரண்டு உணர்ச்சிகளின் வேகமும் விச்வரூபம் எடுத்தது போலாகிவிட்டதால் பத்திரகாளி நடையுடன் ஓடிவந்து காப்பி பலகாரத்தை எடுத்து



வீசி மருமகள் முகத்திலேயே சிறிதும் தயாதாக்ஷண்ய மின்றிக் கொட்டிவிட்டு "ஏண்டி! சித்தராங்கி! என் மகன் தாயற்ற அனாதைப் பரதேசி என்று எண்ணிவிட்டு நீ உன் பரிவைக் காட்டி மைத்துனருக்கு இத்தனை தைரியமாய் காப்பி கொடுக்க வந்துவிட்டாயா? சீச்சீ! வெளியே போ! நான் கோயிலுக்குப் போனவள் அப்படியே செத்துவிடு வேன் என்று பார்த்தாயா? நீயுந்தான் அப்படியும் ஒரு காலம் வருமா என்று ப்ரதி நிமிஷமும் ப்ரார்த்தனை செய்கிறாய். எனக்குத் தெரியாதென்று நினைத்தாய்....என்று வாயில் வந்தபடி ஏதேதோ கூறிவிட்டுத் தானே உள்ளே சென்று மறுபடியும் காப்பி கொண்டுவரும்போது மூத்தப் பிள்ளையை நோக்கி முறைத்துத் திட்டிவிட்டு வந்த ஓசையும் பாஸ்கரன் செவியில் படாமலில்லை.

பெருமழை பேய்ந்து ஓய்ந்ததுபோல் அந்தசோடாவாட்டர் காஸ் போன்ற ஆத்திரம் நுரை நுரையாய்க் கிளம்பி அடங்குவதுபோல் அடங்கிய நிலையில் "ஏண்டா ராஜா! இப்பதான் வண்டி வந்ததா? உடம்புக்கென்னப்பா இளைத்திருக்கிறாயே! ஜுரம்கிரம் அடித்ததா? இந்தா இதைச் சாப்பிடு," என்று வெகுபரிவுடன் கூறியபடியே கொடுத்ததோடு தான் கோயிலிலிருந்து கொண்டுவந்த குங்கும ப்ரஸாதத்தையும் கொடுத்துத் தலையைத் தடவியவாறு தன் தாயுள்ளத்தின் அன்பைச் சொரிந்தாள்.

பாஸ்கரன் புதுமையில் பழமையைப் புகுத்தி மெருகிட்டவன். ஆதலால் முதலில் தாயாருடைய செய்கையில் மனம் வெகுண்டு வெறுப்புற்றான் எனினும் அதை மேலுக்குக் காட்டிக் கொள்ளாமல், புன்முறுவலுடன் தாயாரின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்த பின், "ஏம்மா என்னைப் பார்த்த நண்பர்கள் என்னடா ரப்பர் டயர்போல் உப்பி விட்டாயே! எந்த கடையில் அரிசி வாங்குகிறாய் என்று கேட்கிறார்கள்? நீ என்னடான்னா ஏன் இளைத்து விட்டாய் என்று அங்கலாய்க்கிறாய். பெத்த தாயின் கண்களுக்கு ஒரு விசித்திரமான சக்தி உண்டு என்பதை இதனால் தெரிந்து கொள்கிறேன் அம்மா! உண்மையில் நீதான் இளைத்திருக்கிறாய். கழுத்து கொக்குபோல் தூக்கி கொண்டு நிற்கிறது" என்று கிண்டலாகக் கேலி செய்தான்.

"போடா அசடே! நான் இளைத்து விட்டேனாம். உன் கல்யாணம் நடந்து என் கனவு நினைவாகி விடட்டும். கொக்கு போன்ற கழுத்தை உடைய நான் செக்கு போல, ஏன்? பெரிய ஆனையைப் போல ஆய் விடுவேன். தெரியுமா!" என்று கூறினாள்.

"ஓ அம்மா! ஒரு வேளை என் உடம்பு சிறிது இளைத்திருப்பதற்குக் காரணமும் இருக்கிறது. அதாவது எங்கள் ஆபீஸில் எல்லோரும் சேர்ந்து ஒரு ஒற்றுமை கிளப்பு வைத்திருக்கிறோம். அதில் வருஷ விழா நடந்தது. நாடகம் ஒன்று எங்கள் மேலதிகாரி தயாரித்துக் கொடுத்தார். அதை நாங்கள் இரவு பகல் பாடம் செய்து முதல் தரமாக நடித்தோம்.......

என்று முடிப்பதற்குள் "ஏண்டா; பெரிய பெரிய ஆபீஸ்களில்கூடவா இப்படி நாடகம் போட்டுக் கூத்தடிக்கிறு! பள்ளிக்கூடத்தில்தான் கூத்து போடுகிறு. இதென்ன டாப்பா வேடிக்கை அதென்ன நாடகம். உனக்கென்ன வேஷம் கொடுத்தார்கள்'' என்ருள்.

பாஸ்கரன்:—அதுவாம்மா சிரிக்காமலிருந்தால் சொல்கிறேன். ''மாமியாரின் தர்மம்'' என்பது நாடகத்தின் பெயர். அதில் நான் தான் மாமியார். அசல் பெரிய மாமிபோலவே நடித்து சபாஷ் பெற்றுவிட்டேன். இதோ பாரம்மா! அதற்காக எனக்குக் கொடுத்த வெள்ளிக் கோப்பைப் பரிசு...என்றுகூறி கோப்பையைக் காட்டினன்.

அகி:—அடாடா! ப்ரமாண்ட பரிசாக இருக்கிறதே! அதென்ன கதை. கொஞ்சம் சுருக்கமாய் சொல்லேன் பார்க்கலாம்.

பாஸ்கரன்:—சுருக்கமாய் என்னத்துக்கு விளக்கமாகவே சொல்கிறேன் கேளம்மா.

ஒரு ஊரில் ஒரு குடும்பம், அதாவது ஒரு பிள்ளை நாட்டுப் பெண் மாமியார். மூன்றே பேர்கள்தான். மாமியார் பெயர் சங்கரியம்மா! மருமகள் பெயர் சாந்த சுந்தரி. மகனின் பெயர் அப்பாதுரை. மாமியார் ஒரு தினம் வெளியே போயிருக்கையில் வீட்டிற்கு ஒரு பிச்சைக்காரன் வந்து.

ஹரஹர சாம்பசிவமே! உன்னை
அடிபணிந்து நின்றேன் அம்பலத்தரசே
ஒருபிடி அன்னத்திற்கிங்கே பாடி
ஓடெடுத்துநாளும் ஓடிஅலேந்தேன்
ஒருபிடி அரிசியும் காணும் உன்தன்
கருணைக்கடலும் காய்ந்துவிட்டதே......

என்று பெரியதாக நடித்துப் பாடவாரம்பித்து விட்டதைக் கண்டதும் அகிலாண்டம்மாளும் மற்றவர்களும் விழுந்து விழுந்து சிரித்ததோடு "பேஷப்பா......பாஸ்கரா: பலே பலேபேஷ்'' என்று ஆர்பரித்துக் கைக்கொட்டி "உம்... மேலே சொல்லப்பா''என்ருர்கள்.

பாஸ்கரனும் கடகடவென்று சிரித்துவிட்டுத் தன் மேல் துண்டைப் புடவைபோல் பிரித்துப் போர்த்துக் கொண்டு மருமகள் சாந்தசுந்தரியைப்போல நடித்துக் காட்டி...'அப்பா! வீட்டில் பெரியவர்களில்லை நீ போய்விடு. என்று பயந்து நடுங்கியபடி சொன்னுன். அதற்கும் ஒரு சிரிப்பு பலத்தது. உடனே பாஸ்கரன் 'இன்னும் கேளம்மா! ...தாயே ஒரு பிடி அரிசி போட பெரியவங்களாவேணும். நானென்ன காசும் பணமும் வேட்டியும் பொருளும் கேட் டேனு! பிடி அரிசிகூடவா உன்னுல் போட முடியாது. என் ருன் பிச்சைக்காரன்.

அந்தச் பிச்சைக்காரனைவிட வெகு பரிதாபகரமான-மோசமான நிலைமையில் அந்த நாட்டுப் பெண்ணிருப்பது அந்தப் பிச்சைக்காரனுக்கு எப்படியம்மா தெரியும். நாட் டுப் பெண்ணை அந்த மாமியார் என்ன பாடுபடுத்துகிருள் தெரியுமா! அந்த பாகங்களை நான் நடித்த அழகும், பட படப்பும் இருந்ததுபாரு. அடாடா! சொல்லிமுடியாது. தத்ரூபமாய் அப்படியே இருந்ததால் ஒவ்வொரு ஸீனிலும் நான் வந்துநடித்தபோது கரகோஷமும் சிரிப்பும் வானை யளாவியதும்மா.......

பாஸ்கரனின் வாய் கதைசொல்கிறது. கண்கள் தாயின் ஒவ்வொரு உணர்ச்சிகளையும் திராசுக் கோல் போல் அளவெடுத்துக் கொள்கிறது. இந்த ரகஸியத்தை யாரறிய முடியும்...பாஸ்கரன் மேலும் தொடர்ந்தான். 'அம்மா! மாமியார் இருக்கிருள்பாரு. ஒருதினம் தன் சம் மந்தியம்மாள் வாசலில் வந்து தியங்கித் தியங்கி நிற்பதைப் பார்த்ததும் இழுத்துக் கட்டிக்கொண்டு அவளிடம் சண்டை பிடித்து உள்ளே வரவிடாமல் துரத்திவிட்டதோடு உள்ளே வந்து நாட்டுப் பெண்ணைத்திட்டி சூடுபோடும் காட்சி நடந் தது பாரு......

அகிலாண்டத்தை அங்கு காணவில்லை, மெல்ல நழுவி விட்டாள். பாஸ்கரனு விடுகிறவன். அம்மாவைத் தேடிக் கொண்டு அடுக்களைக்குச் சென்று கையைப்பிடித்து இழுத்துவந்து உட்காரவைத்து "என்னம்மா! நான் ஸ்வா ரஸ்யமாய் நடித்துக் காட்டுவதைப் பார்க்காமல் எழுந்து போகிருயே......பிறகு பிச்சைக்காரன் திட்டிக்கொண்டே போகிருன்" என்று ஆரம்பித்ததை அகிலாண்டம்மாள் அலக்ஷ்யமாகப் பார்த்து......போருண்டா கதை யழகு. இது அத்தைப்பாட்டி சொல்லும் அழுகக் கதை—ஊசக் கதை—உதவாக்கரைக்கதை—இதுயாருக்கடா வேண்டும்.

மாமியார் பிச்சைக்காரனைப் பாக்கிருள். நான் போகச் சொல்லாமல் மருமகள் போகச்சொன்னுல் நீ எப்படியடா போவாய். நான் சொல்கிறேன் போய்விடு என்கிருள். இதுதானேடா கதை. கதையாம் கதை வெட்கங்கெட்ட கதை. இதைப்போய் உத்யோகஸ்தர்கள் நடித்தார்களாம் ....அடுப்பில் காந்துப்போகிறது என்று கூறிக்கொண்டே விடுவிடென்று போய் கிடுகிடென்று வந்தாள். பாஸ்கர னுக்குவந்த சிரிப்பை அவனுல் அடக்கவே முடியவில்லை.

அதே சமயம் பஸ்கரனின் பிதா சந்திரசேகரர் கறிகாய்கள், வாழை இலை சகிதம் வந்து சேர்ந்தார். 'ஓ! பயல் வந்துவிட்டானு! நான் அப்போதே நினைத்தேன். நீ கடிதத்தில் எழுதி யிருந்தாய் பாரு. நீ வராவிட்டால் பெண் வீட்டார் சகிதம் நானே வந்து விடுவேன் என்று. அந்த வாசகத்திற்குப் பயந்து கொண்டுதான் வந்து விட் டான். பேஷ்! அகிலாண்டம், உன் யுக்தியே யுக்தி. ஏண்டா பாஸ்கர்! அதானே?' என்று அபரிமிதமாய்ப் பொங்கி வரும் சந்தோஷத்துடன் கேட்டார்.

பாஸ்கரன் வயதில் மிகச் சிறியவனுயினும் அனுபவ ஞானமும் தீர்காலோசனையும் அதிகமுடையவனுதலால் தன் பிதாவின் வார்த்தையில் அவன் ரசத்திற்குப் பதி லாக விரசத்தையும், மனைவியை உத்ஸாகப்படுத்திப் பேசு வதாக நினைத்துப் பேசுவதில் தாயின் துணிகரத்தை பயங் கரமாக வளர்க்கும் தன்மையையுந்தான் கண்டானே யன்றி ஹாஸ்யத்தை அணுவளவும் காணவில்லை. அதனுல் சிரிப்பு என்கிற உணர்ச்சி எங்கோ மறைந்துபோய் முகத் தில் வெறுப்பின் ரேகைகள் படர, வரண்ட கண்களுடன் பெற்ரேரைப் பார்த்தான். வாய் பேசவில்லை. எனினும் ஏதோ ஒன்றைச் சொல்லி வைத்துப் பெரியவர்களை த்ருப்தி செய்ய வேணுமே என்கிற நோக்குடன் "அப்பாவுக்கு வீட் டில் பேசும்போது கூட வகுப்பில் பாடம் நடத்துவதாகவே எண்ணிப் பேசுகிருர், இல்லையாம்மா! இப்போது நீங்களும் நானும்தான் அப்பாவின் மாணவ மாணவிகள். சரிதா னேப்பா"...என்று அர்த்தமற்ற ஒன்றை அழுத்தமாகச் சொல்லி வைத்தான்.

அந்த வரட்சிப் பேச்சிலும் பெற்ரேருக்குள்ள அளவு கடந்த அன்பினுல், வாத்ஸல்யத்தினுல், இனிமையையே கண்டு பூரித்துச் சிரித்தார்கள். இந்த சமயத்தைப் பயன் படுத்த எண்ணிய பாஸ்கரன், "மன்னீ! தீர்த்தம் கொண்டு வாங்கோ!" என்று உரத்தக் குரலில் அன்பு ததும்பக் கேட்டான்.

அவ்வளவுதான் தாமதம். அகிலாண்டம் இதைப் பொறுப்பாளா? அடுத்த க்ஷணமே வெகு மிடுக்காக எழுந்தபடியே "ஏண்டா ராஜா! நான் குத்துக்கல்லுபோல் உட்கார்ந்திருப்பது உனக்குத் தெரியவில்லையா? என் கையால் உனக்குச் செய்ய நான் துடிக்கிறேனே! தாயுள்ளத்தின் தவிப்பு உனக்கு எப்படியடா தெரியும்? நீயும் தந்தையானல் தானே தெரிந்து விடும். என்னையே மிஞ்சி விடுவாய்"என்று சொல்லியபடியே உள்பக்கம் செல்கையில் டம்ளரில் தீர்த்தத்துடன் மருமகள் வருவதைக் கண்டு ரண வீரபத்ரசண்டி போல் ஒரு விழிப்பு விழித்துப் பார்த்த படியே அவள் கையிலுள்ள டம்பளரை வெடுக்கெனப் பிடுங்கி வீசிக் கொட்டிவிட்டுத் தானே உள்ளே சென்று வேறு டம்பளரில் தீர்த்தத்தைக் கொண்டு வந்தாள்.

இந்த அபூர்வ செய்கையையும் பாஸ்கரன் பார்க்காமலில்லை. தன் தாயின் போக்கை ஒவ்வொன்றையும் பார்க்கப் பார்க்க, முதல் தினம் மணப் பந்தலில் மூத்த மருமகளின் மறைவுக்காகக் கண்ணீர் வடித்த மாமியாரையே மனக்கண்ணுல் கண்டு வியந்தான். தாயார் கொடுத்தத் தீர்த்தத்தைச் சாப்பிட்ட பின்னர் தான் கொண்டு வந்துள்ள பெட்டியைத் திறந்து பெரிய சரிகை போட்ட இரண்டு சேலைகள், ரவிக்கைகள், கல்கண்டுகள் முதலிய சாமான்கள், தாம்பூலம் எல்லாவற்றையும் எடுத்து வைத்து, "அம்மா! இந்த புடவையில் உனக்குப் பிடித்தமானவற்றை நீ எடுத்துக் கொண்டு மற்றொன்றை மன்னிக்குக் கொடுத்து விடு" என்று கூறிவிட்டு தாயாரின் முகத்தை உற்று நோக்கினன்.

அந்த முகத்தில்தான் எத்தனை கோணல்கள்! எத்தனை விதமான உணர்ச்சிகளின் ரேகைகள்! உதட்டின் பிதுக்கலும், வளைவுகளும் கணக்கிட முடியுமா? அடடா! இத்தனை விசித்ர மாறுதல்களைக்கண்ட பாஸ்கரனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. தாயாரின் முகபாவத்தில் மின்னல்கள் தாக்குவது போன்ற வேகத்தில் பலவித உணர்ச்சிகளைக் கண்டு கொண்டான் எனினும் வாயிலிருந்து என்னதான் வருகிறதோ பார்ப்போம் என்ற நினைப்புடன் பொறுமையாக வீற்றிருந்தான்.

இதற்குள் தகப்பனரும் தமையனும் வந்துவிட்டார்கள். "அடடே! பஸ்டு கிளாஸ் சேலைகள் பொறுக்கி வாங்கிக் கொண்டு வந்து விட்டானே! என்ன அகிலாண்டம்! இவைகள் உனக்கா...அல்லது... ஐ. ஏ. எஸ். படிக்கும் அகல்யாவுக்கா....?" என்று கேட்டபடியே கண்ணை விரித்தார்.

இதையே முக்யமாக எண்ணிய அகிலாண்டம்மாள் பெரிதாக நகைத்துக் கொண்டே "இதோ பாருங்கோ! ஏதோ அவனுக்குப் பெத்தத் தாயாரிடமுள்ள பாசத்தால் இரண்டு புடவைகளையும் ஜம்மென்று நானே கட்டவேண்டும் என்கிற பேராவலுடன் வாங்கி வந்திருக்கிறான். நான் இத்தனை பெரிய சேலைகளைக் கட்டிக்கொண்டு போனால் தானே அவர்களுடைய கவுரவத்திற்குத் தக்கபடி இருக்கும் என்கிற முன் யோசனை அவனுக்குத் தெரியாதா என்ன? ஒன்பதுகஜ புடவையை இக்காலத்திய....அதிலும் படித்துப் பட்டம் பெற்றுள்ள நாகரீக நாரீமணிமள் கட்டுவார்களா என்ன? என்னைப்போல் வயதானவர்கள்கூட இக்காலத்தில் ஜாதிகட்டாகிய மடிசார் புடவையை விட்டுவிட்டு தொம்பைக் கூண்டிற்கு உரை போட்டது போல் மாம்பழக் குசவான் கட்டிக்கொண்டு கல்யாணத்தில் தாரை வார்க்கவும் வந்துவிடும்போது, சிறுசுகள் இதைக்கட்ட எப்படி முடியும்?" என்று ஒரே கல்லில் நான்கு மாங்கனிகளை அடிப்பது போல் தன் கருத்துக்களை வெளியிட்டுவிட்டுப் புடவைகளையும் அடுத்த க்ஷணமே தன் பீரோவிற்குள் அடைக்கலப் படுத்தி விட்டாள் என்றால், பாஸ்கரனுக்குப் பேசுவதற்கு இனி இடம் உண்டா? வியப்பும் திகைப்பும் அவனை முற்றுப் புள்ளி இட்டு பதுமைபோலாக்கிவிட்டதால் வாய் திறக்கவே இல்லை.

இதற்கிடையில் சேஷகிரி தன்னை தடபுடலாக அலங்கரித்துக்கொண்டு வந்து, 'அம்மா! நான் போய் சம்மந்தி இடம் தெரிவித்துவிட்டு வருகிறேன். எத்தனை மணிக்கு நாம் வருவதாகச் சொல்வது? கல்யாண மாப்பிள்ளையைக் கேட்டாயா?' என்று கூறிக் கண்ணைச் சிமிட்டினான்.

பேசாமடந்தையாய் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த பாஸ்கரன் தனக்கு ஆபீஸிலிருந்து வந்துள்ள கடிதத்தை எடுத்துத்தமயனிடம் காட்டி, "இதோ பாரு. நான் நாளையே இங்கிருந்து போய்விட வேண்டும். வெளியூர் ப்ரயாணத்திற்கு இன்னும் அனேக ஏற்பாடுகள் செய்யவேண்டும். நான் இப்போதுதான் முதல் முதல் பெரிய வேலையில் போய்ச் சேர்ந்த உடனே லீவு வாங்கிக்கொண்டு வருவதென்பதும் நடக்காத காரியம். அதோடும் அந்த செய்கை அநாகரீகமானதாகும். ஆகையால் கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போய் விடாது. இன்னும் ஆறு மாதம் கழித்து நான் லீவில் வருகிறேன். அப்போது உங்கள் இஷ்டப்படி நடக்கப்பார்க்கிறேன்" என்று முடிப்பதற்குள் அகிலாண்டத்தின் கோபம் கிறுகிறு என்று தலைக்கேறி

விட்டது. கண்களை அகல விரித்தபடி "போடா! பயித்தியக் காரப் பயலே. இந்த காலத்தின் வேகமும் சவுகரியமும் உனக்கெப்படியடா தெரியும்? அந்த காலத்தைப்போல் ஒரு கல்யாணத்தை முடிப்பதென்றால் ஆறு மாத காலம் வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இக்காலத்தில் ஏதடா? அக் காலத்தில் என்றால் வசதிகள் மிகக்குறைவு. பந்துக்களிடம் விசாரித்து அனுமதி பெற்று வரும் படலமே இரண்டு மாத காலத்தை விழுங்கி ஏப்பமிட்டுவிடும். பணமோ பலரிடம் கடன் வாங்கியோ, யாசித்தோ செய்யும் விதிதான் பலருக் கிருந்தது. அதோடு சின்னப்பிள்ளை சிறிய பெண் எத்தனை உபத்திரவங்கள் அக்காலத்திலிருந்தது. இப்போது நினைத் தால் நாளையே விவாகத்தை முடித்துவிடும் இக்காலத்தின் சுகபோக சவுகர்யங்களுக்கு முன்பு ஏண்டா காலத்தைக் கடத்த வேண்டும். இன்று பகல் மூன்றுமணிக்கு நாங்கள் வருகிறோம், பாஸ்கரனும் வந்து விட்டான் என்று இப் போதே போய் சொல்லிவிட்டு வாடா..." என்று மூத்த மக னுக்கு உத்திரவிடும்சமயம் ஒரு சேகவன் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து நீட்டினன்.

சம்மந்தியின் வீட்டு ஆள்தான் என்பதை அறிந்த உடனே சேஷகிரி ஒரு சிறிய குழந்தையைப்போல் குதித்த வாறு "அம்மம்மா! அவரே கடிதமனுப்பி இருக்கிறார்" என்றுகூறி படிக்கவாரம்பித்தான்.

ஸ்ரீராமஜெயம்.

மதிப்பிற்குரிய ஸ்ரீமான் சந்திரசேகரர் அவர்களுக்கு,

ஸேதுராமன் நமஸ்காரம் செய்து எழுதியது. உபய குசலம். நான் இக்கடிதம் எழுதுவது உங்களுக்கு வியப் பாய் இருக்கலாம். இன்று காலையில் உங்களுடைய சிறிய குமாரர் ஊரிலிருந்து வந்திருப்பதாக ஸ்டேஷன்மாஸ்டர் நாகலிங்க ராவ் எனக்கு ப்ரத்யேகத் தகவல் அனுப்பி னார். மெத்த சந்தோஷத்தை யடைந்து நானே இதை எழுதுகிறேன். நமக்குள் வித்யாஸமே இல்லை என்ப தால் நமது ஐக்யத்தையும் அன்பையும் முன்னிட்டு நாங்களே இன்று பகல் மூன்று மணிக்கு என் புதல்வி அகல்யாவுடன் உங்கள் வீட்டிற்கு வருகிறோம். நீங்கள் வீட்டிலிருப்பதற்கு ரஜா எடுக்க வேண்டியதால் இப் போதே எழுதுகிறேன். வித்யாசமாக நினைக்கவேண் டாம். உங்கள் குமாரரை நான் மிகமிக விசாரித்ததாகச் சொல்லவும். மற்றவர்களுக்கும் என்னுடைய நமஸ்காரம்.

இங்ஙனம்,

உங்கள் சம்மந்தத்தை விரும்பும்

ஸேதுராமன்.

இதை உரக்கப் படித்துக் கேட்டதுதான் தாமதம், பாஸ்கரனைத் தவிர மற்றவர்கள் தம்மை மறந்து குதிக்கவே ஆரம்பித்து விட்டார்கள் என்றால் மிகையாகாது. கட்டாயம் வரும்படியும் தான் ஆவலுடன் காத்திருப்பதாயும் சந்திரசேகரன் கன குஷியுடன் பதிலனுப்பிவிட்டு, “அகிலாண்டம்! பயலுக்கு அதிருஷ்டமென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும். இவன் வந்த விஷயத்தை ஸ்டேஷன் மாஸ்டர் சொல்லியனுப்புவதென்றால் அந்த மனிதருடைய ஆவல் எத்தனை உச்சஸ்தானத்திலிருக்க வேண்டும் பாரு. இந்த சம்மந்தத்திற்கு மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்பது எப்படித்தான் தெரிகிறது பார்த்தாயா! சரி பாஸ்கர்! முதலில் ஸ்நானம் செய்யப் போப்பா!”என்றார்.

இந்த விஷயமே பிடிக்காதிருக்கும் பாஸ்கரனுக்குத் தான் என்ன செய்வது, என்ன சொல்வது என்றே தோன்றாமல் ஒரே குழப்பமாகி விட்டது. வாயைத் திறக்காமல் ஒரு துண்டை உதறித் தோள்மீது போட்டுக் கொண்டு, “அம்மா! நான் ஆற்றுக்குச் சென்று அலரிநீராடி விட்டு வருகிறேன். வெகு நாட்களாகி விட்டது அங்கு ஸ்நானம் செய்து” என்று சொல்லியவாறு கிளம்பினான்.

“அடேய்-ராஜா! ஆற்றுக்கும் வேண்டாம், குளத்திற்கும் வேண்டாம். கிட்டவா இருக்கிறது? ஜலம் காய்ந்திருக்கிறது. இங்கேயே குளிக்கலாம் வா...நாளைக்கு வேண்டுமானால் போகலாம்” என்று தடுத்துப் பார்த்தாள். எதையும் பாஸ்கரன் கேட்காமல் நேரே ஆற்றை நோக்கிச் சென்று விட்டான். பையன் வெய்யிலில் சென்றால் எங்கே முகங் கருத்து விடுமோ! சோர்வினால் அழகுக் குன்றி விடுமோ! சம்மந்தியாகப் போகிறவர்களுக்கும், முக்யமாக மணக்கப் போகும் பெண்ணுக்கும் அபிப்ராயம் எங்கே மாறிவிடுமோ என்கிற திகில்தான் அவள் மனதில் போராடியது.

பாஸ்கரன் பத்தடி தூரம்கூட சென்றிருக்கமாட்டான், அதற்குள் ஒரு முக்யமான விஷயம் நினைவிற்கு வந்தது. அதாவது தனது பாலியத்தில் தன்னுடன் பழகியவர்கள் சிலருக்குத் தனது பரிசாகக் கொடுத்து மகிழ சில சாமான்கள் வாங்கிவந்திருந்ததை எடுத்துச்செல்ல மறந்துவிட்டிருந்தான். அது நினைவு வந்தவுடனே வீட்டிற்கு வந்தான். நடைபக்கம் வரும்போதே தன் தாயாரும் தமையனும் பேசும் குரல் சற்று கடுமையாகக் காதில் விழுந்ததும் மந்திரத்தால் கட்டுப்பட்டவன்போல நின்று கேட்டான்.

அகிலாண் : சேகிஷரி! நான் சொல்வதைக் கேளு. அனாவசியமான உன் விரோதத்தை வெளிக்குக் காட்

டாதே. அவன் என்னவோ பச்சைக் குழந்தையைப் போலத்தான் பழகுகிருன். உன்ஞல் நமது காரியம் கெட்டு விடாமல் நிறைவேரவேண்டும்'' என்பதற்குள் சேஷகிரி துடிதுடிப்புடன், "அம்மா! இன்று கட்டாயம் நிச்சயதார்த் தத்தைச் செய்துவிடவேண்டும். அவர்கள் சொல்லியபடி பணத்தைப் பந்தலில் கட்டிவிடவேண்டும். அதைத் தள்ளிப் போட்டு என்னை மிதித்துவிடாதே'' என்ருன்.

அகிலா: அட பயித்தியமே. இன்று அந்த பணத்தை வாங்கி அப்படியே உன்னிடம் கொடுத்துவிட்டு மறுகாரியம் செய்வதற்காகத்தானே நான் இத்தனை பாடுபடுகிறேன். நீ அது விஷயத்தில் சந்தேகமே படாதே. இன்னும் கேட்கப் போனல் என் கையில், ரகஸியமாகவே பணத்தைக் கொடுக்கும்படியும் ஏற்பாடு செய்திருக்கிறேன். தெரியுமா?

சேஷ: ஓ! அப்படி செய்திருக்கிருயா! பேஷ், நல்ல ஏற்பாடு. அம்மா! இன்ஞெரு விஷயம்! இந்தக் காரியத்தில் அப்பா ஏதாவது குறுக்கிட்டுத் தலையிடுவாரேயானல் பிறகு விவகாரம்விபரீதமாகிவிடும். இதைமுதலில் சரிப்படுத்திவிடு.

அகிலா: போடா அசடே! இது எனக்குத் தெரியாதா! அப்பா இதில் சற்றும் ப்ரவேசிக்கவே மாட்டார். அப்படி ஏதாவது வாலாட்டினரோ! அவருடைய ஆதி ரகஸிய விஷ யம் ஒன்று என்னிடம் அகப்பட்டுக் கிடக்கிறது. அதை அம்பலப்படுத்தி விடுவேன் தெரியுமா!

இந்த தாயும் மகனும் பேசும் பேச்சுக்கள் எல்லாம் பாஸ்கரனின் இதயத்தில் பெரும்புயலைக் கிளப்பியதோடு அவனுடைய நிலையைத் தடுமாறச் செய்துவிட்டது...என் மீது அண்ணனுக்கு விரோதமா? அப்பாவின் வாழ்க்கை யில் ஒரு ரகஸியமா! இதென்ன புதிர் போன்ற மர்மமா யிருக்கிறதே...என்று குழம்பிப்போய் தடைகட்டிய நாகம் போல நின்றுவிட்டான். புறக்கடை பக்கம் தண்ணீர் குடத்துடன் வரும் இவனுடைய மன்னியின் சோக பிம்பத் தின் பரிதாபம் வேறு இவன் மனத்தைக் கலக்கிவிட்ட தால்..."அடடா! என்ன உலகம். என்ன மனித சமுதா யம்....என் தாயின் உள்ளத்தில் அன்பிற்குப் பஞ்சப்புய லடிக்கின்றது. ஆனல் ஆசைக்குத் தஞ்சமாகக் கிடக்கும் கீழ்த்தர எண்ணம் நிரம்பிக் கிடக்கிறதே. இதுதாஞ உல கத்தின் முற்போக்கு. இதுதாஞ சீர்திருத்தத்தின் சிறப்பு'' என்று எண்ணிப் பதுமைபோலாகி விட்டான். மனக் குழப்பம் அவன் நெஞ்சை முற்றுகையிட்டது.

183216

# காந்தி கீர்த்தனம்

ஜனவரி மாதம் 30-ந் தேதி மகாத்மாவின் அமரத்வ தினம். அந் நாளின் ஞாபகார்த்தமாக "காந்தி கீர்த்தனம்" என்னும் ரூ. $3\frac{1}{2}$ விலையுள்ள புத்தகத்தை [கவியோகி சுத்தானந்த பாரதியார் எழுதியது] குறைந்த விலையில் தபால் செலவு உள்பட 3 ரூபாய்க்கு கொடுக்கப்படும். உடனே மணியார்டர் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

★

துப்பறியும் வீரசிங்கம்

## ராஜாராம் நாயுடு.

வை. மு. கோ.

112-வது நாவல்.

முதல் பாகம்—விலை ரூ 2.

விற்பனைக்குத் தயார்.

★

# ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்

வெகு நாட்களாக கைவசமில்லாதிருந்த, ஸ்ரீமதி வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன் அவர்கள் எழுதிய (ஸ்ரீமதி குமுதினி அவர்களுடைய முன்னுரையுடனும்) பல அழகிய படங்களுடனும் கூடிய புத்தகம் விற்பனைக்குத் தயார். விலை ரூ. 1-8.

Jaganmohini (Jan. 1958) Regd. No. M. 2210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷமலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபாரதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை

பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய மூரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா.12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்

அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்களஞ் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

## வை.மு. பத்மினி

ரூ. 1-8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
பாலர் போதினி
12 சிறு கதைகள் 1-0

---

சுத்தானந்த பாரதி
கார்த்தி கீர்த்தனம் 3-8

---

ப்ர.ப. அண்ணங்க
ராசார்ய ஸ்வாமி
ஸ்ரீவிஷ்ணு
ஸஹஸ்ர
நாமஉரை 1-0
அபூர்வ
ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.